தன்வந்திரி

உ

கணபதிதுணை.

தன்வந்திரி பகவான்

திருவாய்மலர்ந்தருளிச்செய்த

கருக்கிடை நிகண்டு

முன்னூறு.

264 / நூ-நா / தன் நிகண்டு 4
[73] 1

தன்வந்திரி நிகண்டு

பக்கம் 80

கந்தசாமி முதலியாரும்

இன்னும் பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டாராய்ந்து

பிழையறப் பரிசோதித்து.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ரா. ம. குருசாமிக்கோனார்

அவர்கள் விருப்பத்தின்படி

எ. தீனதயாள முதலியார்

அவர்களால்,

சென்னை

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1925

இதன் விலை] [அணா 8

S. 239

உ
கணபதிதுணை.

தன்வந்திரி பகவான்.
திருவாய்மலர்ந்தருளிச்செய்த

கருக்கிடை நிகண்டு
முன்னூறு.

இஃது
பட்டாளம் எருக்கன்சேரி
கனகசபைபண்டிதர் முன்னிலையில்
மதுரை-புதுவை-சென்னை இச்சங்களில்
தமிழ்த்தலைமைப் புலமைநடத்திய
களத்தூர்-வேதகிரிமுதலியார் குமாரர்கள்
ஆறுமுகமுதலியாராலும்
ஆயுள்வேதபாஷ்கரன்
கந்தசாமி முதலியாராலும்
பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டாராய்ந்து
பிழையறப்பரிசோதித்து.
இ. ரா, ம. குருசாமிக்கோனார்
அவர்கள் கேட்டுக்கொண்டபடி
எ. தீனதயாள முதலியார்
அவர்களால்,

சென்னை
ஸ்ரீ ஆதிமூலம்பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1925.

உ

கடவுள் துணை.

தன்வந்திரிபகவான்

திருவாய்மலர்ந்தருளிச்செய்த

கருக்கடை நிகண்டு-௩ா.

தேவஸ்துதி காப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆயிதிரோ தாயினுட மைந்தன் கூறு
அன்பானம ணேமணியி னுதிபோற்றி
வாயிதிரோ தாயென்ற மனே மணித்தாய்
வளர்ந்ததொரு வாசியுட பாதம்போற்றி
மாயிதிரோ தாயினுட கணபதியேயென்று
வாழ்த்தினேன் வல்லபையி னுதி போற்றி
ஆயிதிரோ தாயினரு ளானசத்தி யன்பான
வைரவர்தன் பாதம் போற்றி. (1)

தனமானகணபதியுங் கந்தன்காப்பு
தகத்தானமயேஸ்வரத்தின் பாதங்காப்பு
வனமான இருஷிகளின் பாதங்காப்பு
வளர்த்தெடுத்த என்குருவின் பாதங்காப்பு
கனமான சதாசிவத்தி னருளேகாப்பு
கருவாக நின்றபிண்ட மூர்த்திகாப்பு
மனமான சற்குருவின் வாசிகாப்பு
மகத்தான வழலையுட வாதிகாப்பே. (2)

காப்பென்ற ஆதிவறை வேதம்பாட
கருவான உருத்திரனு மயேஸ்வரனுஞ்சொன்னர்
ஆப்பென்ற அவதரித்த பிண்டச்சோதி
அன்பான வழலையுட மார்க்கப்போக்கு

வாப்பென்ற ஞானத்தின் சூக்ஷஞ்சூக்ஷம்
வளமாகக் கற்பத்தின் குருவின்சூக்ஷம்
நாப்பென்ற வைத்தியத்திற் காதிசூக்ஷம்
நலமான சூக்ஷமெல்லாம் நவிலுவோமே. (3)

* வாசியின்சூக்ஷம்.

நவிலவே வாசியுட சூக்ஷங்கேளு
நலமான வாசியதொன் பதிலேபோகும்
கவிலவே வாசிமூ லத்தில்நின்று
கருவாகப் பறக்குமடா இன்னங்கேளு
நவிலவே யிருபத்தோ ராயிரததறுநூறுசுவாசம்
நலமாகப் பறக்குதென்று சிவன்சொலக்கேட்டேன்
அவிலவே பறந்துதான் பாழிற்போச்சு
ஆனதொரு சுவாசங்க ளொடுக்கங்கேளே. (4)

சுவரசங்களினுேக்கம்.

கேளப்பா கம்பமது நாபிக்கம்பம்
கெடியான கம்பத்தில் நவத்துவாரங்கள்
பாரப்பா துவாரமது அதில்தானுண்டு
பகரரிய துவாரங்க ளடைப்புக்கேளு
ஆளப்பா அன்னமது போகுந்தொண்டை
யதிலேதான் போகுதென் றரனுர்சொன்னுர்
நாளப்பா நான்கேட்டுக் கட்டிக் கொண்டேன்
நலமான வுந்தனுக்குச் சொல்வேன்பாரே: (5)

இரேசகபூரக-கும்பகம்.

சொல்லவே மம்மென்று கும்பிப்பாரு
சொற்பெரிய துவாரங்க ளடைத்துப்போச்சு
வல்லவே சூரியனி லிருத்திக்கும்பி
வலமாகச் சந்திரனில் மெள்ளவாங்கு
அல்லவே நாற்பதுநாற் பழக்கம்பண்ணி
அப்பனே வாசியது வசியமாச்சு
கல்லவே யுன்றேகம் பிலத்துப்போச்சு
கனமான வாசியதுகை வசந்தானுச்சே. (6)

* வாசி-குதிரை அதேமூச்சு

சுப்பிரமணியர் தியானம்.

ஆச்சப்பா இல்லத்தில் குகைதான்செய்து
அப்பனே யதிலிருந்து சொல்லக்கேளு
வாச்சப்பா சுப்பிரமணியர் தியானஞ்சொல்வேன்
வளமான அரீம்-கிரீம்-வகுத்துப்பாரு
மாச்சப்பா உரீம்-எரீம்-ஓம்-சுப்பிரமணிய
மகத்தான சுப்பிரமணியஞ் சித்தியாச்சு
காச்சப்பா ஐந்தெழுத்தும் ஆணும் பெண்ணும்
கனமான ஐங்கோணத் திட்டிடாயே. (7)

இட்டிடவே கிழக்காக இருந்துகொண்டு
இதமாகத் தியானத்தைப் பதிறுரேதி
கட்டிடவே முன்சொன்ன ஊமைதன்னைக்
கருத்தாகக் கும்பித்துப் பழக்கம்பண்ணு
வட்டிடவே கம்பம திறுகிப்போச்சு
வளமான நாற்பதுதான் நாளைக்குள்ளே
நிட்டிடவே துவாரங்க ளடைத்துப்போச்சு
நிலையான சுவாசமது வசந்தானுச்சே. (8)

ஆச்சடா ஒருநாளி லிருக்கும்பாரு
அப்பனே நின்றபின்பு அறையக்கேளு
வாச்சடா ஒருநாளில் நின்றதானல்
வளமான சுவாசமது மடங்கிப்போச்சு
காச்சடா ஒருவருஷம் நின்றுயானல்
கனமான தேகமது இருகிப்போகும்
நாச்சடா வழலைசுண்ணங் கடுகாவுகொள்ளு
நலமாக ஒன்றுக்கொன் றுதவியாமே. (9)

ஊமை.

ஆமப்பா வப்போது தருமஞ்செய்நீ
ஆனதொரு வாசியது சித்தியாச்சு
வாமப்பா வடமொழிபோ லொருநாலுண்டோ
வளமான வூமையனை யார்தான்சொன்னர்
காமப்பா கருதலாய் மறைத்துச்சொன்னர்
கணக்காக யான்திறந்து காட்டினேன்பார்
நாமப்பா வூமையது மகாரந்தாண்டா
நலமாக எழுப்புமது அகாரந்தானே. (10)

தானென்ற ஆணல்ல பெண்ணுமல்ல
தனதாக மூலத்தை யூன்றிப்பாரு
வானென்ற பரமாகி நின்றுதப்பா
வளமான தீபம்போல் நிற்கும்பாரு
மானென்ற மணிவிளக்காய் நின்றசத்தி
மகத்தான ஆயிரத்தெட் டிதழுமாகி
கானென்ற இவ்விதங் ளானமூலங்
கணக்காக யான்திறந்து சொல்லிட்டேனே. (11)

சொல்லிடவே ஆணாகும் பெண்ணுமாகுஞ்
சொற்பெரிய மயமாகும் விந்துவாகும்
மல்லிடவே மகத்தான நாதமாகும்
மருவிவருஞ் சிதம்பரமு மிதுவேயாகும்
கல்லிடவே கடலாகு மலையுமாகுங்
கனமான செடிகளொடு மரங்களாகும்
நல்லிடவே ஆலயங்கள் கோயிலாகும்
நலமான சத்தசாகரங்களாமே. (12)

ஆமெனவே யூமையினாற் சனித்ததாச்சு
ஆனதொரு வித்தனையு மிதனாலாச்சு
வாமென்ற இம்மெனவே யட்சரந்தானையா
வளர்ந்துதடா கொடிமுடி கைலாசமாச்சு
நாமெனவே சித்தருக்கு உயிராய்நின்ற
நலமான ஊமைதனைச் சொன்னேன்பாரு
காமெனவே யென்னைப்போல் திறந்துசொல்வார்
கனமான தன்வந்திரி பகவானனே. (13)

நானென்ற மூன்றுலட்சத் தொகுப்புசொன்னேன்
நலமான சூட்சமெல்லா நிகண்டிற்சொன்னேன்
வானென்ற வாசியுட சூட்சமூலம்
வளமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
மானென்ற வாசியைநீ பழக்கம்பண்ணு
மகத்தான வாசியைநீ மெதுவாய்க்கும்பி
கானென்ற ஒடுக்கயிலே சிதறியோடுங்
கனமாகப் பயபத்தி யாகச்செய்யே. (14)

செய்யவே யான்சொல்வே னின்னமுங்கேள்
செயமான வழலையைநீ போடுபோடு
ஐயவே ஒருவருஷம் நிலையில்நின்றால்
ஆனதொரு நூற்றிரண்டு வருஷங்காக்கும்
ஐயனே யந்தவித மிருந்துகொண்டு
அன்பாகக் காயாதி சுண்ணங்கொள்வாய்
வையவே கொண்டுவிடச் சட்டைதள்ளும்
வளமான வச்சிரம்போல் காயமாமே. (15)

காயமாம் தேகத்தை வைத்துக்கொண்டு
கனமான அறுபத்து நாலும்ஆடு
மாயமாம் வாசியைத்தான் நிறுத்திக்கொண்டால்
மகத்தான காயத்திற் கழிவோயில்லை
மாயமாய்ப் பூசையைச்செய் மறக்கவேண்டாம்
வளமான இரக்கத்தை யெண்ணிக்கொண்டால்
ஞாயமாய்ச் சொல்லிவிட்ட படியேநின்றால்
நலமான வாசியது சித்தியாச்சே. (16)

* சுழியின்விவரம்.

ஆச்சப்பா இந்தவிதஞ் செய்தாயானல்
அன்பான வாசியது சுழியில்புக்கும்
காச்சப்பா சுழியென்ன சுழியைச்சொல்வேன்
கனமான ஹரியெழுத்தின் முதலெழுத்து
வாச்சப்பா சிதம்பரத்தின் நடுவிருக்கும்
வளமான சுழிக்குள்ளே யடங்கிப்போச்சு
நாச்சப்பா நந்தியிவ் விதமாய்ச்சொன்னார்
நலமாக ஒளியாதே திறந்திட்டேனே. (17)

வாலையின்வயது.

திறந்திட்டேன் என்னைப்போல் நீயுமாவாய்
திறமாகி புன்மனதை யூன்றிப்பாரு
வறந்திட்ட வாலைக்கு வயதோகேளு
வளமாகப் பத்தாறு வயதுமாமே

* சித்தரிக்கும் சுழிக்கு மேற்கோ ளுதாரணம்.

அறிந்திட்ட சூரியன்போ லிருப்பாளாத்தாள்
ஆனதொரு ரவிமதியு மிணையொவ்வாது
நறந்திட்ட வாலையெனும் பெண்ணைவைத்து
நலமாகக் கும்பிட்டால் பாவம்போச்சே. (18)
போச்சப்பா அவளாடை கழற்றிக்கொண்டு
புனிதமாம் வாலையெனும் பூசைசெய்வார்
காச்சப்பா கள்ளுடன் சாராயம்வைப்பார்
கனமான அமிர்தமென்று கொள்வாரையா
நாச்சப்பா சடுதியிலே நாசமாவார்
நலமான பித்தவெறி மேலேகொண்டு
வாச்சப்பா வாமத்தில் காமஞ்செய்வார்
வளமான காமத்தால் வாமம்போச்சே. (19)

அகஸ்தியர்.

சித்தரியாம் உட்சுழியாஞ் சிகாரமாகி
தேவியுட வட்சரமே ஆ-ஊவாகி
முத்தான ரீங்காரங்-கிலியு-மாகி
மூன்றெழுத்தாய் வாலையாய் முடியுமாகி
பத்தாகி யெட்டாகி யிரண்டுமாகி
பராபரமாம் பராபரையா பருளுண்டாச்சு
சித்தரெல்லா மிந்தெழுத்தை யறியார்பாருஞ்
செப்பினே னிதனுடசிங் காரந்தானே. (20)

வாலையின் பேயர்.

போச்சடா யிவையெல்லாம் வாமமல்லப்
புகழான பொருளைவைத்து வாமஞ்செய்தால்
ஆச்சடா ஞானமொடு யோகஞ்சித்தி
அன்பான வாதமோ டெட்டெட்டுஞ்சித்தி
வாச்சடா வாலைக்குப் பேர்தான்கேளு
வளமான சல்லிமரம் பாவைதாண்டா
பாச்சடா பால்வார்த்து வாமஞ்செய்தால்
பரிவாகச் சொன்னதெல்லாஞ் சித்தியாமே. (21)

வாலையின் பேயர்.

சித்தியென்ன பத்தாகு மாதமப்பா
சிறப்பான சல்லிவே ரென்றும்பேரு
அத்தியென்ன கொடிமூல மென்றும்பேரு
ஆனதொரு கன்னிப்பெண் ணென்றும்பேரு

வத்தியே வாலைப்பெண் ணென்றும்பேரு
வளமான சத்திப்பெண் ணென்றும்பேரு
சத்தியே பத்துவய தென்றும்பேரு
சமர்த்தான ஞானப்பெண் ணென்றும்பேரே. (22)

பேரான அஷ்டகம்ப மெட்டும்பேரு
பிலமான*சக்களாவென்றும்பேரு
ஆரான அஷ்டசித்தி யென்றும்பேரு
ஆனதொரு உருளையென்ற வாலைப்பேரு
நாரான நந்தியென்றும் வாதமென்றும்
நலமான தேவியென்றுஞ் சிவந்தானென்றும்
வாரான சத்திய மென்றும்பேரு
வளமான சற்குருதா னென்றும்பேரே. (23)

சல்லிவேரின் பேயர்.

பேரப்பா சல்லிமர மூலத்தின்பேர்
பிரபலமா கவிதெல்லா மாச்சுபாரு
ஆரப்பா வாமப்பெண் சல்லிவேரு
ஆனதொரு நந்தீசர் சல்லிவேரு
வாரப்பா சக்களா தேவிப்பெண்தான்
வளமான சல்லிவேரி லொடுங்கிப்போனல்
நாரப்பா நந்தீசர் வாலைப்பெண்ணும்
நலமான சல்லிவே ரொடுக்கந்தானே. (24)

ஒடுக்கமடா நந்திகண்டால் வாதஞ்சித்தி
ஒடுங்கயிலே யிதுவிட்டால் வாதமாமோ
வடுக்கடா வாலைநீ விட்டாக்கால்தான்
வளமான வாதமெல்லாங் கெட்டுப்போகும்
நடுக்கடா மந்திரசித்தி கருக்கள்வேணும்
நலமான சல்லிவேர் தானும்வேணும்
அடுக்கடா சல்லிவே ரில்லாவிட்டால்
ஆனதொரு அதரணவித்தை சித்தியாதே. (25)

சித்தென்ன ஆணுமல்லப் பெண்ணுமல்லச்
சிறப்பாக மங்கைபர மாகிநின்ற
அத்தனருள் சல்லிவேர் வாங்கிக்கொண்டு
அப்பனே பதுமையாய்ப் பண்ணுவாய்நீ

---

* சக்களாசகலை - அதேமாயாரூபம்.

நத்தென்று பதுமைபண்ணி பூசைபண்ணு
நலமான வாமிசிவ காமியாவாள்
நத்தென்று பத்துவய தானதாலே
நலமான வாலைப்பெண் ணென்றும்பேரே. (26)

பேரான வயதென்ன பத்தாந்திங்கள்
பிரபல்லிய மானதொரு கொடிதானப்பா
ஆரான ஆருந்தா னறியமாட்டார்
அன்பான சிவயோகி காண்பான்பாரு
வேரான வேருமல்ல செடியுமல்ல
விளங்குகின்ற பரத்தோடே சேர்ந்ததாச்சு
சீரான என்னிகண்டிற் றெரியச்சொன்னேன்
சிறப்பான நந்தீசர் அருள்தான்பாரே. (27)

கிரேதாயுகத்திற் றேரின சித்தர்களின் றொகுப்பு.

பாரப்பா யென்னைப்போ லிரக்கத்தோர்கள்
பரிவாக எவருந்தா னில்லைப்பாரு
ஆரப்பா இதைக்கருத்தாய்ச் சொல்லிப்போட்டேன்
அரன்கண்டு சபித்துவிட்டா ரவரைக்கெஞ்சி
காரப்பா வெளியாகச் சொன்னேனென்றார்
கருவாக ராசியுள்ளோன் தேர்வானென்றேன்
ஏரப்பா கிரேதா யுகத்திற்பாரு
என்மக்க ளைஞ்னூற்பேர் தேர்ந்திட்டாரே. (28)

திரேதாயுகத்திலும் துவாபரயுகத்திலும் கலியுகத்திலும் தேரினசித்தர்களின் றொகுப்பு.

தேரவே திரேதா யுகத்திற்பாரு
திறமாக ஆயிரம்பேர் சித்தரானார்
ஆரவே துவாபர யுகத்திலப்பா
ஆயிரத்தி அஞ்னூறுபேர் அன்பாய்த்தேர்ந்தார்
பாரப்பா கலியுகத்திற் சொல்வேன்கேளு
பரிவாக மூவர்யிரந்தான் தேர்வாரப்பா
சீரப்பா தேவிக்குச் சிவன்தான்சொன்னார்
சிறப்பான தேவிநந்திக்கிச் சொன்னாளே. (29)

சொல்லவே யான்கேட்டேன் நந்திசொன்னார்
    சொற்பெரிய தன்வந்திரி சொல்வேன்பாரு
அல்லவே ஆயிரந்தான் பொன்னீந்தாலும்
    அப்பனே யிந்நூலைக் கொடுக்கவேண்டாம்
வல்லவே வடமொழியைக் கொடுத்தாயானால்
    வல்வினையாய் நோயுனக்கு வந்துசேரும்
நல்லவே நான்சொன்னேன் எளிதீதல்ல
    நலமாகத் தர்மத்தை யெண்ணுவாயே. (30)

தர்மத்தை எண்ணினவர்க் கெல்லாஞ்சித்தி
    தவறாது ஒருநாளுந் தர்மந்தர்மம்
வர்மவானென்றாக்கால் வினைகட்சேரும்
    வலுவான பிணிகளெல்லாம்வந்துபோச்சு
கர்மங்கள்செய்யாமல் தர்மஞ் செய்தால்
    கருதிவந்தகர்மங்கள் தீரும்பாரு,
தர்மவா னென்றாக்கால் சொல்வேன்கேளு
    தயவாக மறைப்பெல்லாஞ் சொல்வேன்பாரே. (31)

வழலையின்பெயர்.

பாரப்பா ஊமைபென்ற எழுத்தைச்சொன்னேன்
    பரிவாக வாலைப்பெண்ணை திறந்துசொன்னேன்
ஆரப்பா சல்லிவேர் விவரஞ் சொன்னேன்
    அப்பனே வழலையுட பேரைக்கேளு
வாரப்பா பிண்டமென்றும் அண்டமென்றும்
    வளமான ஆதியந்த மென்றும்பேரு
நாரப்பா அம்டியென்று முடியென்றுபே
    நலமான நாத்தல்லி யென்றும்பேரே. (32)

பேரான குருவென்று மூவருப்பென்றும்
    பிரபல்லியமானம் தொரு கம்பமென்று
மாரான வழலையென்று முப்பூவென்று
    மகத்தான கொடியென்று மூலமென்றும்
சீரானமதியென்றும் ரோமமென்றுஞ்
    சொற்றருசி சவாக்கார மூணுப்பென்றும்
நாரான ஏரண்டம் பேரண்டமென்றும்
    நலமான இல்லறத் தினண்டமென்றே. (33)

இல்லான சிப்பியென்றும் நத்தையென்றும்
இதமான கும்பிடு கல்லென்றும்பேரு
வல்லான மேனியானைக் கல்லென்றும் பேரு
வளமான வெள்ளைக்கல் லென்றும்பேரு,
மல்லான சரமாரி யுப்பென்றும் பேர்
மகத்தான கேசரிதா னென்றும்பேரு
நல்லான வாதியுப் பென்றும் பேரு
நலமான ஆதிவிங் கென்றும்பேரே. (34)

பேரான பச்சைமலப் புளிதானென்றும்
பிரபல்லியமான தொரு நாதமென்றும்
வாரான வழலைமுப் பூவென்றும்பேரு
வ ரமான சத்தியுப்பு சிவத்தினுப்பு
காரான நாட்கரு வென்றும்பேரு
கனமான வெளிக்கருதா னென்றும்பேரு
மாரான பத்மினிசங் கினிதானென்று
மகத்தான அத்தினிசித் தினிதானென்றே. (35)

தானான கோரையென்று முடிதானென்றுந்
தகத்தான வைந்துருவ மண்டமென்று
மானான கிளிஞ்சியென்றுஞ் சிப்பியென்று
மகாமகர பூவென்று மிதற்குப்பேரு
வானான சிற்றண்டம் பேரண்டமென்றும்
வளமான நஞ்சினுட கொடிதானென்றுந்
தானான காயென்றும் பழந்தானென்றுந்
தாக்கான கன்னியென்றுங் காட்டினாரே. (36)

காட்டினா ரிரவியென்றுந் திகைப்பூடென்றுங்
கருத்தான திகைப்பூச்சி யென்றுஞ்சொன்னார்
நாட்டினார் காயமென்றுஞ் சிவன்விங்கென்றும்
நலமான இந்திரகோபப் பூச்சியென்றும்
வாட்டினார் சனியீசன் வாகனந்தானென்று
வளமாக அஷ்டகம்பப் பாவையென்று
மாட்டினார் கருங்கோழி யென்றுஞ்சொன்னார்
மயமாகப் பேரெல்லாம் நாம் சொன்னோமே. (37)

சொன்னேமே அறுபத்து நாலுபேருஞ்
சொன்னதெல்லா மித்தனைமுப் பூவுக்கப்பா
அன்னேமே அறுபத்து நாலுசித்தர்
அவரவர்க ளிச்சைபடி சாஸ்திரம்சொன்னார்
வன்னேமே தலைக்காலாய் சொல்லிப்போட்டார்
வளமான சித்தர்கள்தான் வகுத்தநூல்கள்
மன்னேமே சித்தர்கள் தான்கூடிக்கொண்டு
மகத்தான பாஷைகளால் மறைத்திட்டாரே. (38)

மூளையின்பெயர்.

மறைத்திட்டார் தலைப்பிண்டந் தன்னையப்பா
மகத்தான மூளைக்குப் பேர்
தான்கேளு அறைத்திட்டார் சிவன்விந்து மூலைப்பாலென்றும்
அன்பான பழச்சாறென் றிதற்குப்பேரு
கறைத்திட்டார் புளியென்றும் பழமலந்தானென்றுங்
கனமான ஐங்காயமென்றும் பேரு
நறைத்திட்டார் விந்துவென்றுந் திகைப்பூடென்றும்
நல்லதொரு திகைப்பூச்சி யென்றும்பேரே. (39)

பேர்சொல்ல விதற்கப்பா வேணதுண்டு
பேரான மூளையைநீ தெளிவாய்க்காண
ஆர்சொல்லப் போரார்க ளென்னைப்போலே
அல்லாருஞ் சொன்னவித மிதுதானப்பா
வார்சொல்லப் போனாலுந் தர்க்கஞ்செய்வார்
வளமாக யான்சொன்னேன் தர்க்கஞ்செய்தார்
நான் சொல்லி வாதாடித் தர்க்கஞ்செய்தேன்
நலமாக இந்நூலின் பொருள்சொல்வோமே. (40)

நூலீதல்.

சொல்லவே யொன்பதிலே யறிவுதோன்றி
சொற்பெரிய பதிதனிலே நல்லோர்க்கல்லால்
அல்லவே தர்ம்மவானென்று சொல்லி
அப்பனே துலாராசி யோர்க்கு ஈவாய்
வல்லவே யவனுந்தான் சித்தனவான்
வளமாகச் சித்ததிக மாகச்செய்வான்
நல்லவே இந்தவித மென்று சொன்னேன்
நலமான சித்தர்கள்தான் மெய்ச்சினாரே. (41)

தலைப்பிண்டசெயநீர்.

மெய்ச்சவே தலைப்பிண்ட மண்டம்வாங்கி
விருதான கல்லுரலில் போட்டுக்கொண்டு
அச்சவே அமுர்தமென்ற ஜலத்தைவார்த்து
அப்பனே இருப்புலக்கை யதனாற்சாடு
வச்சவே பன்னிரண்டு ஜாமங்குத்து
வளமாகரேகித்து மெழுகுபோலாம்
கச்சவே கரண்டிகொண்டு பீங்கானிற்போட்டு
கனமான ரவிதனிலே நவநாள்வை. (42)

நவநாள்தான் வைக்கயிலே நீரிறங்கும்
நலமான சீசாவில் பதனம்பண்ணு
அவமான அண்டமடா விந்துவிந்து
அப்பனே அண்டவிந்து தெளிவாய்ப்போச்சு
நவநாள்தான் ரண்டுவித மாச்சுதப்பா
நகையாதே ஜெயநீரின் பெருமைகேளு
மவநாள்தான் மூலைப்பாலும் பழச்சாறென்றும்
மகத்தான நவநீத ஜெயநீராமே. (43)

ஜெயமான முத்துநீர முதமென்றுஞ்
செய்ததொரு செங்கழுநீர்ச் செந்நீராச்சு
அயமான வாய்நீரும் வழலைநீரும்
அப்பனே வாமநீர் காமநீராம்
கயமான கன்னிநீ ரண்டநீரு
கண்காண ஆனையுட விந்தென்றும்பேர்
நயமான கனியாத பழநீரென்றும்
நலமான பத்மினியின் நாதமென்றே. (44)

புளியின்பெயர்.

நாதந்தான் பூமியுட நாதமென்று
நலமான பூநீறு பழத்தினீறு
வாதந்தா னிவ்விதத்தில் நிற்கும்பாரு
வளமான புளியினுட பேரைக்கேளு
ஆதந்தான் பழம்புளிமலப்புளி யென்றும்பேர்
அகமான பஞ்சமல மென்றும்பேரு
காதந்தான் ஐங்காய மென்றும்பேரு
கண்காணு வெளிகருவென் றிதற்குப்பேரே. (45)

பேரான இந்நூலைப் பழித்தபேர்க்கும்
பிலமான கர்மநோய்சித்திக்கும்பார்
ஆரான அஷ்டகுன்ம மெய்தும்பாரு
ஆராலுந்தீராது அரன்மேலாணை
வேரான வேதாந்த சித்தர்சொன்ன
வேதாந்த சாஸ்திரத்தின் கருமறைப்பை
நாரான என்பேரன் தட்சணயன்
நலமான ஆயிரத் திருநூறென்றே. (46)

என்றேதான் ஆயிரத் திருநூறப்பா
இதமாக வென்பேரன் மறைத்து வைத்தான்
கன்றென்ற கருக்களைத்தான் மறைத்து வைத்தான்
கனமாக இந்தவித மெடுத்துஆடு
வன்றென்று நான்சொன்னப் படியெடுத்து
வளமாக சொன்னசித்தர் சாஸ்திரவீதம்
அன்றென்று அவரவர்தானிம் முறையெடுத்து
அப்பனே நிகண்டினுடக் கருசேர்த்தாட்டே. (47)

ஆட்டா என்னைப்போற் றெண்டுசெய்தோர்
அப்பனே சித்தர்களி லாருமில்லை
பாட்டடா பணிவிடைக ளனேகஞ்செய்தேன்
பரமான நந்தீசர்ப் பாதந்தன்னை
வாட்டடாநந் தீசராயிரந்தா னீய்ந்தார்
வளமான சகலகலைக் கியானமப்பா
நாட்டடா அஷ்டசித்தி யோகங்கண்டேன்
நலமான ஞானவாதங் கண்டேனே. (48)

கண்டதொரு ஞானமுடன் வாதப்போக்கு
கனமான யோகமுடன் வைத்தியப்போக்கு
விண்டதொரு மாந்தரீக மயேந்திரசாலம்
வெளியாகத் திறந்துவிட்டா ராயிரத்தில்
அண்டதொரு அண்டர்பிரா னருளைப்போற்றி
அன்பான நிகண்டிதுதா னடக்கம்பண்ணு
தொண்டனுக்குத் தொண்டனா யிருந்தானகிற்
றேனாத கருவெல்லாந் தோணுங்காணே. (49)

காணப்பா கண்மணியஸ் வனியேகேளு
காணாத கருவெல்லாங் காட்டுறேன்பார்
தோணப்பா தொண்டுபண்ணி நூலைவாங்கு
சொற்பெரிய மோசமதாய் வாங்கவேண்டாம்
ஆணப்பா நூலீந்தோர் மனநொந்தக்கால்
ஆனதொரு அந்தரமா யிடிதான்வீழும்
பேணப்பா அவர்மனது பூரிக்கச்செய்து
பிலமான நூலைத்தான் வாங்கிக்கொள்ளே. (50)

சுத்தசலத்தின்பெயர்.

கொள்ளவே சுத்தசலப் பேரைக்கேளு
கொடிதான உரோமநீ ரென்றும்பேரு
கள்ளவே பணியினீ ரென்றும்பேரு
கனமான எருக்கம்பா லென்றும்பேரு
விள்ளவே ஊசிநீ ரென்றும்பேரு
விதமான அப்புநீ ரென்றும்பேரு
அள்ளவே ஆலம்பா லென்றும்பேரு
அன்பான சங்குநீ ரென்றும்பேரே. (51)

பேரான மதனவல்லி நீரென்றும்பேர்
பிரபல்லிய மாதொருவாசிநீரு
வாரான வாசிக்கு உயிரென்றும்பேர்
வளமான வாயமூர்த மென்றும்பேரு
நாரான நவபிர்ம உயிரென்றும்பேர்
நலமான நவநீத நீரென்றும்பேர்
நீரான சுத்தசல மதற்குத்தானும்
நிலையாக இத்தனைபேர் நிறைத்திட்டாரே. (52)

நிறைத்திட்டார் சித்தர்கள்தான் கூடிக்கொண்டு
நிலையாகப் பாஷைகள்தான் பேசிக்கொண்டார்
விரைத்திட்டார் நூல்தோறும் பாஷையாக
விவரமா யான்திறந்து நிகழ்த்திட்டேன்பார்
நரைத்திட்டார் கன்னியுடக் குடத்தினீரை
நலமான சலத்தைவிட்டா லெல்லாம்போச்சு
இறைத்திட்டார் சுத்தஜல மிதுதானப்பா
இதைவிடுத்தா லொன்றுமில்லை இதமாபாரே. (53)

பாரப்பா எட்டானதிங்கள் தானும்
பற்றிவந்து சுத்தசலங் குடத்தில்நிற்கும்
ஆரப்பா அதுதாண்டா மற்றென்றில்லை
அப்பனே அதைவிட்டால் வாதம்போச்சு
வாரப்பா வழியாகத் திறந்துசொன்னேன்
வளமாக என்னூலைப் பழித்தாரானால்
நாரப்பா நரகில்வீழ்ந் தலைவார்பாரு
நலமாகத் தருமபுத்ரன் சொன்னேன்பாரே. (54)

நூற்றேகை.

சொன்னனடா ஒருநிலையாய் நின்றாயானால்
சொற்பெரிய சகலசித்து மிதற்குள்ளாகும்
வன்னனடா இதைவிட்டால் மௌனமில்லை
வளமான அமிர்தமென்ற பேருமில்லை
கன்னனடா புத்திவர என்னூல்பாரு
கனமான நிகண்டப்பா முன்னூறாகும்
அன்னனடா இருநூற் றெட்டில்தானும்
ஆனதொரு வைத்தியக் கருக்கடைசொன்னேனே. (55)

சொன்னனடா எழுபத் தொன்றிலப்பா
சொற்பெரிய வைத்தியந்தா னப்பாபாரு
அன்னனடா அந்நூற்றில் சகலகலைசொன்னேன்
அப்பனே ஆயிரத் திருநூறுக்குள்
வன்னனடா வாதமொடு வைத்தியமார்க்கம்
வளமாகப் பன்னீரா யிரந்தான்பாரு
மன்னனடா சகல முந்தான் றோற்றுவிக்கும்
மகத்தான முப்பூநாற் பதையும்பாரே. (56)

பாரப்பா ஞானமைம் பதையுப்பாரு
பாருலகில் முப்பதிலே மகிமைபாரு
ஆரப்பாநாடியெண் பதையும்பாரு
அன்பான ஞானவெண்பா ஈராறும்பார்
வாரப்பா என்னூலி லொன்றுபார்த்தால்
வளமாகக் கருக்களெல்லாந் தோற்றும்பாரு
நாரப்பா இவையெல்லாம் பார்த்தாயானால்
நலமாக யோகவான் ஆவான்பாரே. (57)

போகமென்ற வாசியதை யறியவேண்டும்
யுகம்வரைக்குஞ் சடலமது நிற்கவேண்டும்
வாகமென்ற வாலைப்பெண்ணை அறியவேண்டும்
வளமான சல்லிவே ரறியவேண்டும்
நாகமென்ற ரவிமதியை அறியவேண்டும்
நலமான சிவசத்தி யறியவேண்டும்
பாகமென்ற கைபாக மறியவேண்டும்
பரிவான மந்திரந்தான் சித்திக்கவேண்டே. (58)

சிவ முப்பூ.

சித்திக்க வகைகேளு சொல்வேனப்பா
சிதசாத தலைப்பிண்ட வோடதப்பா
வத்திக்க நாலுதான் கொண்டுவந்து
வளமாகக் கல்லூரலி லிட்டுத்தாக்கு
அத்திக்க இருப்புலக்கை யதனாற்சாடு
ஆனதொரு அண்டமெல்லாந் தூளாய்ப்போகும்
நத்திக்க நாலுபலம் பூநீருகும்
நலமாக இரண்டுமொன்ருய்ப் பாண்டத்திறபோடே (59)

போடவே பனிநீரு படிதான்வாரு
பொருளான அண்டவிந்துபடி யரைதான்வாரு
ஆடவே கலக்கியதை தெளிவிறுத்து
அப்பனே அத்தெளிவைக் காய்ச்சுக்காய்ச்சு
வாடவே வேண்டாங்காண் காய்ச்சிக்கொண்டால்
வளமான எண்ணெய்கக்கி மெழுகுபோலாம்
நாடவே குழம்பாகும் எடுத்துக்கொண்டு
நலமான பீங்கானில் வார்த்திடாயே. (60)

வாரடா அகலமுள்ள பீங்கானில்தான்
வளமாக வார்த்ததின்மேல் பீங்கான்மூடு
ஆரடா சிவப்புமண் பூமியிறுன்
அப்பனே நந்தவனம் வைத்துக்கொண்டு
நாரடா வதனடுவில் மேடைபோட்டு
நலமான பீங்கானை வைத்துப்போற்று
காரடா பால்பழமு பசாரஞ்செய்து
கனமாக நாற்பத் தஞ்சுநாளே. (61)

அஞ்சுநாட் சென்றுதென்றால் சொல்லக்கேளு
ஆரான முப்பூவும் பூக்கும்பாரு
வஞ்சுகின்ற முப்பூவை யெடுத்துக்கொண்டு
வளமாகக் குப்பிதனில் பதனம்பண்ணு
நஞ்சிதுதான் சிவமுப்பூ பதனம்பண்ணு
நலமான முப்பூவுக்குப் பூசைபண்ணு
கஞ்சுகின்ற நான்சொன்ன முப்பூப்போலே
கடிதான முப்பூவுஞ் சொல்லார்பாரே. (62)

சத்தியின் முப்பூபெயர்.

பாரடா சிவமுப்பூ சொன்னேனப்பா
பரமான சத்தியின்முப் பூவைக்கேளு
ஆரடா இருநான்காம் பிண்டம்வாங்கி
ஆனதொரு அண்டமதை யெடுத்துக்கொண்டு
வாரடா அண்டத்தின் கோரைப்போக்கி
வளமான ஓட்டுடனே மூளைவாங்கி
நாரடா உரலிலிட்டுச் சொல்லக்கேளு
நாதாந்த உலக்கைகொண்டு சாடுசாடே. (63)

சாடப்பா சாடயிலே முன்புளியும்போடு
சமர்த்தான மெழுபோ லிரேகிக்குப்பார்
வாடப்பா வழித்தெடுத்து பாண்டத்திலிட்டு
வளமான சுத்தசலப் படியிரண்டு
நாடப்பா செந்நீரு படிதானென்று
நலமான பாண்டத்தில் வார்த்திடாய்நீ
ஆடப்பா அடுப்பேற்றிக் கலக்கிக்கொண்டு
அப்பனே தீமூட்டி யெரித்திடாயே. (64)

எரித்திடவே யிதிலெண்ணெய்க் கக்கிப்போகும்
இதமான எண்ணெய்கக்கி மஞ்சட்போலாம்
வரித்திடவே நாதமென் றிதற்குப்பேரு
வளமான பாண்டத்தை யிறக்கிக்கொண்டு
நரித்திடவே பீங்கான்தான் அகலமாக
நலமாகப் பீங்கானில் ஊற்றிக்கொண்டு
அரித்திடவே முன்சொன்ன பூமிக்கேற்றி
ஆனதொரு மேடையைத்தா சதுரம் பண்ணே. (65)

பண்ணப்பா தும்பைசெடி சூழவைத்து
பரிவாக நடுமேடை பீங்காவைத்து
பண்ணப்பா அர்ச்சனைதான் தும்பைப்பூவால்
வளமாக நாற்பதுநாட் செய்துவாநீ
அண்ணப்பா மேலுமொரு பீங்கான்மூடி
அப்பனே யிரவிலிரண்டாஞ் சாமம்வாங்கு
நண்ணப்பா ஒருசாம மதிதான்வீசும்
நலமாய்கல் தனிலிரவி வீசுந்தானே. (66)

வீசுகிற கனலிலே பூக்கும்பூவு
விதமான முப்பூவு வெள்ளையையா
ஆசுகிற தென்னவென்றால் சாரைபபோலே
அப்பனே கம்பியும் பிரைச்சல்தானும்
வாசுகிற தேவியுப்பு இதுதானப்பா
வளமான முப்பூவைப் பதனம்பண்ணு
நாசுகிற தேவியுப்பைப் பதனம்பண்ணு
நலமான குப்பிதனி லடக்கம்பண்ணே (67)

அடக்கப்பா சிவத்துக்குச் சத்திசொன்னேன்
அன்பான சிவமதுதாம் விந்துவிந்து
வடக்கப்பா சத்திதான் நாதமாகும்
வளமான அகாரமுடன் உகாரம்நிற்கும்
நடக்கப்பா நாதமது உகாரந்தாண்டா
நலமான விந்துதான் அகாரமாகும்
சடக்கப்பா பிரிதிவி அப்புமாகுப்
சமர்த்தான அப்புடனே பிரிதிவியென்றே. (68)

உரோமப்பெயர்.

என்றப்பா பிரிதிவி யட்புங்கூடி
இதமான முப்பூவாம் இனிமேற்கேளு
வன்றப்பா சிவசத்தி யுட்புச்சொன்னேன்
வளமான மயிர்தனக்குப் பெயர்தான்கேளு
அன்றப்பா கோரையென்றுஞ் சவ்வென்றம்பேர்
ஆனதொரு மயிர்தனக்குச் சகலஞ்சொல்வார்
மன்றப்பா சகலத்திற்கு மயிரைப்போக்கு
மகத்தான மயிர்போக்கி யெல்லாஞ்செய்யே. (69)

செய்யப்பா என்னிகண்டைச் சித்தர்கூடி
செம்மையுட னவரிடத்தில் வைத்திருந்தார்
வையப்பா வாதாடி கேள்விசொன்னேன்
வளமான நிகண்டையப்பா ஈய்ந்தார்பாரு
வையப்பா உந்தனுக் கீய்வேனப்பா
மகத்தான நிகண்டிதுதான் வளஞ்சொன்னேன்பார்
நையப்பா இன்னமொன்று சொல்வேன்பாரு
நலமான சிவமுப்பூச் சுண்ணங்கேளே. (70)

சிவமுப்பூச்சுண்ணம்.

கேளப்பா சிவனுப்புப் பலந்தானறு
கிருபையாய்க் கல்வத்தி விட்டுக்கொண்டு
ஆளப்பா சிவவிந்து விட்டுஆட்டு
அப்பனே சாமமதி சண்டுஆட்டு
வாளப்பா சுத்தசலம் சாமம்எட்டு
வளமாக மயனமதாய் ஆட்டிக்கொண்டு
நாளப்பா வழித்தெடுத்து வில்லைசெய்து
நலமான சுக்காக உலர்த்திடாயே. (71)

உலர்த்தப்பா ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு
உத்தமனே முன்நீரால் சீலைசெய்து
வலர்த்தப்பா வராட்டியெட்டிற் புடத்தைப்போடு
வளமாக ஆறியபின் பார்த்தாயானல்
அலர்த்தப்பா வெண்முப்பூச் சுண்ணமாகும்
ஆனதொரு சுண்ணமதைப் பதனம்பண்ணு
கலர்த்தப்பா சுண்ணத்தைக் குப்பிதன்னில்
கனமாக பதனம்பண்ணிப் பூசைபண்ணே. (72)

முப்பூச் சுண்ணப் பேயர்.

பண்ணப்பா முப்பூச்சுண்ணப் பேரைக்கேளு
பரிவான வழலைச்சுண்ண மென்றும்பேரு
அண்ணப்பா அண்டச்சுண்ண மென்றும் பேரு
ஆனதொரு சவர்க்காரச் சுண்ணமென்றும்
வண்ணப்பா விந்துச்சுண்ண மென்றும்பேரு
வலுவான பூரணத்தின் சுண்ணமென்றும்
கண்ணப்பா காரச்சுண்ண மென்றும்பேரு
கனமான சவர்க்காரச் சுண்ணந்தானே. (73)

தானப்பா பூரீற்றுச் சுண்ணமென்றும்
தயவான வெண்காரச் சுண்ணமென்றும்
வானப்பா மதனவல்லிச் சுண்ணமென்றும்
வளமான பூமிநாதச் சுண்ணமென்றும்
கானப்பா மதவானைச் சுண்ணமென்றும்
கடிதான ஆனைக்கற சுண்ணமென்றும்
ஆனப்பா முப்பூரீ றென்றும்பேரு
ஆனதொரு சங்குச்சுண்ண மென்றும்பேரே. (74)

பேரப்பா முப்பூச்சுண்ணப்பேருமாகும்
பிரபல்லிய மானதொரு சமாதிச்சுண்ணம்
வாரப்பா இவ்வாறு முப்பூச்சுண்ணம்
வளமாக இத்தனைப்பே ராச்சுதப்பா
ஆரப்பா அறிவார்கள் முப்பூச்சுண்ணம்
அப்பனே யறித்தாக்கால் சித்தன்சித்தன்
காரப்பா பிரமனொடு விடணுருத்திரன்
கடிதான இவர்மூவர் முப்பூவாச்சே. (75)

ஆச்சப்பா இவர்மூவராலேஐயா
ஆனதொரு * சராசரங்கள் கொடுமுடிகளாச்சு
வாச்சப்பா இந்நூலை வலதழித்தால்
வளமாகக் கர்மநோ யெப்தும்பாரு
நாச்சப்பா; நூல்களைத்தான் அறியாமூடர்
நலமான சாஸ்திரத்தை யெளிதென்பார்பார்
காச்சப்பா கர்மிகளோ நூலைக்காண்பார்
கனமான சிவயோகி பார்ப்பான்பாரே. (76)

சிவயோகி பார்த்தாக்கால் எல்லாஞ்சித்தி
சிறப்பான மடையரப்பா அறியமாட்டார்
அவயோகி யானக்கால் அழிந்தேபோகும்
ஆனதொரு செய்முறைகள் பலியாதப்பா
நவயோகி யாகிலுந்தான் நூல்பார்த்தாக்கால்
நலமாகப் பார்க்கையிலே யெல்லாந்தோன்றும்
மவயோகி பார்த்தாக்கால் நூல்களேதான்
மகத்தான நூல்களப்பா மயங்கும்பாரே. (77)

---

* சராசரம்-நடையுள்ளவையு நடையில்லாதவையும்.

மயங்குமடா இவன்புத்தி மயங்கிப்போகும்
மகத்தான நூலப்பா நால்விதமாய்த்தோன்றும்
அயங்குமடா இவன் மனதைப் பழித்தேபோடும்
அவன்நினைத்த படிதோன்று முடியாதப்பா
வயங்குமடா வழக்காளி நூலதாகும்
வளமான நூலைத்தான் எளிதாய்ப் பார்ப்பான்
நயங்குமடா மைவா னென்றுக்கால்தான்
நலமான ஒருமனதாய் பார்ப்பார்பாரே. (78)

ஒருமனதா யிருந்தாக்கால் எல்லாஞ்சித்தி
உலுத்தரென்ற காமுகர்க்குச் சித்தியாமோ
வருமமாய் ஒருவரைத்தான் மோசம்பண்ணி
வளமாகத் தன்மனுதான் பிழைக்கச்செய்தோன்
அருமணந்தான் அந்திசந்தி யவர்நொந்தாக்கால்
ஆனதொரு மோசத்தால் கருமமாச்சு
கருமந்தான் கோடிதான பாவஞ்செய்து
கனமான நூல்பார்த்தால் சித்தியாதே. (79)

சித்தித்தால் நல்லோர்க்குச் சித்தியாகும்
சிறப்பான தவயோகிக் கெல்லாஞ்சித்தி
வத்தித்தால் யோகமுடன் ஞானமார்க்கம்
வளமான வாதமொடு வைத்தியசித்தி
அத்தித்தா லவர்மனதா லொன்றுசொன்னால்
ஆனதொரு சொல்லப்பா பலிக்கும்பாரு
நத்தித்தால் தருமவா னவன்தானப்பா
நலமான ராசியுள்ளோன் சித்தன்தானே. (80)

மதிஜெய நீர்.

சித்தான மதிசெயார் சொல்லக்கேளு
சிதறுமல் அண்டத்தை வாங்கிக்கொண்டு
வத்தான நடுப்பாதி பிளந்துகொண்டு
வளமானகம்பியுப்புப் பலந்தான்போடு
மத்தான சிவசுண்ணங் காரச்சுண்ணம்
மருவிவரும் பலமதுதான் அதனிற்போடு
அத்தான மதிதனிலே வைத்திட்டாக்கால்
ஆனதொருவிந்தெல்லாம் நிராய்ப்போமே. (81)

மதிசெயநீரின் பேயர்

போமப்பா இதன்பேர்தான் சொல்லக்கேளு
பிரபல்லிய மானதொரு வதிசெய நீரென்றும்
ஆமப்பா ரவிசெயநீ ரென்றும்பேரு
ஆனதொரு அண்டநீ ரென்றும்பேரு
வாமப்பா வாலைசெய நீரென்றும்பேர்
வளமான அண்டத்தின் விந்தென்றும்பேர்
காமப்பா கன்னிநீ ரென்றும்பேரு
கனமான பதுமினியின் செயநீரென்றே. (82)

செயமாக என்னைப்போல் திறந்துசொல்லார்
தீர்க்கமா யென்வாக்குக் கெதிரோஇல்லை
வயமான வழலையைத்தான் பூசித்தேன்பார்
வளமாகச் சகலசித்துஞ் சொன்னாளாத்தாள்
மயமான வாலையென்ன வயதோகொஞ்சம்
மகத்தான வாலையவள் சித்தர்தேவி
நயமான சித்தருக்குத் தாயாய்நின்றாள்
நல்லதொரு வாலையைத்தான் வசியம்பண்ணே (83)

வாலை பூசை.

பண்ணப்பா வாலைபூசைச் சொல்லக்கேளு
பண்பாக-ஓம் - கிலியும் சவ்வென்றேசொல்
அண்ணப்பா ஐயும்-ரீயுமென்று
அன்பான வரீயும்-நரீயு மென்றுசொல்லு
வண்ணப்பா-அம்-உம் மென்றுமாட்டு
வளவான வாலையுட மந்திரந்தானுச்சு
நண்ணப்பா நாற்பத்து அஞ்சுக்குள்ளே
நலமாக லட்சத்தெண் ணாயிரந்தான்போடே. (84)

போடப்பா பூசைதான் சொல்லக்கேளு
புகழான வடைதோசை அப்பத்தோடு
வாடப்பா பால்பழங்கள் தேங்காய்வெல்லம்
வளமான வஸ்துவொடு சுற்றிவைத்து
நாடப்பா தாம்பூலம் நைவேத்தியத்தோடு
நலமான புட்பரி மளங்கள்சாத்து
ஆடப்பா கதம்பகஸ்தூரிப் புனுகுசாத்து
ஆனதொரு சாம்பிராணி வார்த்திவையே. (85)

வையப்பா வில்வம் அர்ச்சனைகட்செய்து
 வளமான பாவைவைத்துச் செய்துவாநீ
அய்யப்பா அன்னமொடு சுத்திகளும்வைத்து
 ஆனதொரு வாலைபைத்தான் பூசைப்பண்ணு
வையப்பா மதனவல்லி வசியமாவாள்
 மகத்தான வாலைப்பெண் சித்தியாச்சே
நையப்பா நாகவல்லி வசியமாவாள்
 நலமான சித்தெல்லாந் தோன்றும்பாரே. (86)

நஞ்சுக்கோடியின் பெயர்.

பாரப்பா நஞ்சுக்கொடி பச்சையென்றும்
 பாங்கான உரமென்றும் அதற்குப்பேரு
தாரப்பா நாடியென்றும் வீரமென்றும்
 தருகான பூரமென்றும் குருவண்டென்றும்
வாரப்பா கல்லுப்பு என்றும்பேரு
 வளமான பிண்டத்தில் மூத்தவண்டு
நாரப்பா வெண்சாரை யென்றும்பேரு
 நலமான கருநெல்லி யென்றும்பேரே. (87)

பேரப்பா பெற்றதொரு ரசந்தானென்றும்
 பேரான வெண்ணுவ லென்றும்பேரு
ஆரப்பா மதியென்றும் அமுர்தமென்றும்
 ஆனதொரு விந்தென்றும் நாதமென்றும்
வாரப்பா கல்லுப்பு என்றும்பேரு
 வளமான கரியினுட உப்பென்றுஞ் சொல்வார்
நாரப்பா நந்தியுப்பு வாலையுப்பென்றும்
 நலமாகப் பலவிதமாய் நாட்டினாரே. (88)

நாட்டவே யானறிந்து சொல்வேனப்பா
 நலமான பரபிரமப் பிண்டப்பேராச்சு
வாட்டவே நந்தியென்ன பிண்டம்பிண்டம்
 வளமான வாலையென்ன அண்டமண்டம்
காட்டவே கருவென்ன நாதம் நாதம்
 கருவான கருவென்ன விந்துவிந்து
மாட்டவே நாதமென்ன உகாரமாகும்
 மகத்தான விந்தென்ன அகாரந்தானே. (89)

தானாக அண்டவிந்து அண்டநாதம்
தனதாக முன்னே தான் சொல்லிவிட்டேன்
வானாக யான் சொன்னாற் போலேயப்பா
வளமாக ஆருந்தான் சொல்லார் சொல்லார்
ஆனாக ரசமதுதான் விந்துவிந்து
ஆனாக நஞ்சுக்கொடி பிண்டத்தோடிருக்கும்
தானாக உரமதுதான் புளிதானப்பா
தளதான வீரமது புளிதான்பாரே. (90)

பாரடா பூரமது புளிதானப்பா
பாலகனே கருவண்டு புளிதானப்பா
ஆரடா கருநாபி புளிதானென்றும்
ஆனதொரு பச்சையப்பா மூளைமூளை
வாரடா மூத்தவண்டு பிண்டம் பிண்டம்
வளமான வெண்சாரைவிந்துவிந்து
நாரடா கருநெல்லி நாதம்நாதம்
நலமான மதியமுர்தம் நாதவிந்தே. (91)

அண்டச் சுன்னம்.

நாதந்தான் கல்லுப்பு அண்டமப்பா
நலமான வெண்ணாவல் சத்தியுப்பு
மாதந்தான் பத்தான மாதமப்பா
மகத்தான அண்டபிண்ட மூர்த்திக்காணும்
வாதந்தா னிவ்விதமாய்த் திறந்துச்சொன்னேன்
வளமான அண்டத்தின் சுண்ணங்கேளு
ஆதந்தான் தலைப்பிண்ட மண்டோடப்பா
ஆனதொரு ஓடப்பா ரண்டெடுத்தே. (92)

எடுத்தப்பா கல்லுரலி லிட்டுக்கொண்டு
இதமான இருப்புலக்கை யதனாற்சாடி
வடுத்தப்பா தூளாக்கி வடித்துக்கொண்டு
வளமாகக் கல்வத்தி லிட்டுத்தாக்கு
அடுத்தப்பா சுத்தசலம் வார்த்தரைத்து
அப்பனே யதன்பிறகு சொல்லக்கேளு
நடுத்தப்பா சிவச்சுண்ணம் பலந்தான்போடு
நலமான முன்விந்தால் சாமமாட்டே (93)

அட்டிடுவாய் வில்லைசெய்து ரவியிற்போடு
அப்பனே யுலந்தபின்பு எடுத்துக்கொண்டு
வாட்டிடுவாய் செந்நீரால் சீலைசெய்து
வளமாகப் புடம்போட நீறிப்போகும்
நீட்டிடுவாய் நீறெடுத்துப் பூசைபண்ணு
நினைவாகச் சல்லிவேர் பூசைப்பண்ணி
நாட்டுவாய் குப்பிதனி லடக்கஞ்செய்து
நலமான சிவஅண்டச் சுண்ணமாச்சே. (94)

சத்தியண்டச் சுண்ணம்.

ஆச்சப்பா சிவஅண்டச் சுண்ணஞ் சொன்னேன்
ஆனதொரு சத்தியண்டச் சுண்ணங்கேளு
வாச்சப்பா எட்டாவது பிண்டம்வாங்கி
வளமாக அண்டத்தை வாங்கிக்கொண்டு
காச்சப்பா கோரையுடன் மூளைப்போக்கிக்
கனமான அண்டத்தைச் சுத்திக்கேளு
நாச்சப்பா பூநீறு படிதானென்று
நலமான சுத்தசலம் படிதான்ரண்டே. (95)

ரண்டப்பா இரண்டுமொன்றாய்க் கலக்கிக்கொண்டு
ரேகித்து அடுப்பேற்றி தீயைமூட்டு
வண்டப்பா தீமூட்டி யெரித்திட்டாக்கால்
வளமாகச் சுத்தமதாய் சுத்தியாச்சு
கண்டப்பா அண்டோடு எண்ணெய்கக்கிக்
கனமாக எண்ணெய்து சுழன்றுபோகும்
அண்டப்பா அண்டத்தை யெடுத்துக்கொண்டு
அப்பனே கல்லுரலி லிட்டுச் சாடே. (96)

சாடப்பா அண்டத்தைத் தூளாய்ப்பண்ணி
சாஸ்திரமா மென்னுடைய கலைக்கியான வீதம்
ஆட்டப்பா கல்வத்தி லிட்டுக்கொண்டு
அப்பனே அவ்விதமுன் செயநீர்வாரு
நாட்டப்பா அரைத்துவில்லைப் பிடித்துக்கொண்டு
நலமான ரவிதனிலே உலரவைத்து
காட்டப்பா புடம்போட்டு எடுத்தாயானால்
கனமான வெண்ணீறாய் நீறிப்போமே. (97)

நீறமடா சுண்ணும்பாய்க் கடுங்காரச்சுண்ணம்
நிலையான சத்தியண்டச் சுண்ணமாச்சு
வாருமடா அண்டச்சுண்ணஞ் சித்தரப்பா
வளமாக மறைத்துவைத்தார் நான்திறந்தேன்
ஆருமடா என்னைப்போல் திறந்துசொல்லார்
அப்பனே தன்வந்திரி யென்பேராச்சு
காருமடா கன்னிப்பெண் வயதோபத்து
கனமான அண்டமடா பிண்டமென்றே. (98)

என்றப்பா பிண்டத்தி லண்டமாச்சு
எழிலான அண்டத்திற் புளிதானுச்சு
அன்றப்பா புளியதுதான் குருவண்டாச்சு
ஆனதொரு குருவண்டால் புழுகுமாச்சு
வன்றப்பா பச்சையது அண்டத்தில்தான்
வளமான அவுரிபச்சை யதுதானப்பா
நன்றப்பா வாசியுட அமுர்தமாச்சு
நலமான கண்ணேட்ட மமுர்தமாச்சே. (99)

ஆச்சப்பா ஊமையனை யிழுத்துக்கொண்டு
அப்பனே கண்ணேட்டம் பழக்கம்பண்ணல்
வாச்சப்பா வாயமுர்த முருகிவீழும்
வளமான சங்குநீர் தீர்த்தம்வீழும்
காச்சப்பா கண்ணேட்டம் பார்த்தாயானல்
கனமான மனக்கணணுந் தெரியலாச்சு
நாச்சப்பா நந்திக்கண் தெரிந்தபோதே
நலமான சகலமுந்தான் தோற்றுந்தானே. (100)

தானப்பா நல்லோர்க்குச் சித்தியாகும்
தனதான சிவயோகி சித்தன்தானும்
வானப்பா சித்தனுப் பிறந்தோர்க்கெல்லாம்
வளமான சித்தியெல்லாந் தானேதோற்றும்
ஆமப்பா சித்தனென்ற பேர்தானென்ன
ஆனதொரு கன்னியுடன் துலாத்தோர்க்கெல்லாம்
மானப்பா நூல்களைத்தான் சேர்ப்பானையா
மகத்தான கன்னியது தருமநன்றே. (101

தருமந்தா னிப்பிறப்பில் செய்தோர்க்கன்றி
தானகக் காட்டுமடா மறுபிறப்பில்
வளிமந்தான் துலாத்தினுட வண்மைகேளு
வளமான துலாராசி உச்சமானல்
நருமந்தா னல்லபதி னறிலப்பா
நலமான சித்தனென்ற பேருமாகும்
கருமந்தான் காமிகளுக் கென்னவாகுங்
கனமான ராசிகலைக் கியானம்பாரே. (102)

பாரடா என்னுடைய கலைக்கியானத்தைப்
பற்றியே பார்த்தோருக் கெல்லாந்தோன்றும்
ஆரடா கலையென்ன சகலகலை தோன்றும்
அப்பனே நல்லோர்க்குக் கலைக்கியானம் போதும்
வாரடா வழிதுறையு மிதிலேதோன்றும்
வளமான சித்தெல்லாங் காணலாகும்
நாரடா நந்தியொளி காணும்பாரு
நலமான எட்டெட்டு மாடும்பாரே. (103)

வேடியுப்பு.

பாரப்பா அண்டச்சுண்ணஞ் சொன்னேன்பாரு
பரிவான உப்புவகை சொல்வேன்கேளு
வாரப்பா வெடியுப்பு சொல்வேனப்பா
வளமான பூநீறுபடி யரைதானப்பா
ஆரப்பா முன் சொன்ன கம்பியுப்பு
அப்பனே பலமொன்று வாங்கிக்கொண்டு
நாரப்பா அமுரிதனில் பூநீறிட்டு
நலமாகக் கலக்கியதைத் தெளியவாங்கே (104)

வாங்கப்பா தெளியவைத்துக் காய்ச்சுக்காய்ச்சு
வளமாக இறக்கியதை அஞ்சுதரங்காய்ச்சு
ஆங்கப்பா அஞ்சாந் தரத்திலப்பா
ஆனதொரு கம்பியுப்புக் கூடச்சேரு
பாங்கப்பா பதமாக இறக்கிக்கொண்டு
பாங்கான சதிரோடு தன்னிலூற்று
சாங்கப்பா அஞ்சாங்காய்ச் சலுப்பாமந்த
சார்வான வெடியுப்பைப் பதனம்பண்ணே. (105)

கல்லுப்பு.

பண்ணப்பா பூசைசெய்து பதனம்பண்ணு
பார்தனிலே விள்ளாதே யிம்முப்பூதான்
அண்ணப்பா வெடியுப்புச் சொன்னேனப்பா
ஆனதொரு கல்லுப்பு முறைதான்கேளு
வண்ணமப்பா அண்டங்குழித்த தயிலம்வாங்கி
வசமான பூநீறு படிதானென்று
நாணமப்பா பூரண்டத்தில் தைலம் பூநீறிட்டு
நலமான வெடியுப்புப் பலமொன் றிட்டே. (106)

இட்டப்பா சுத்தசலம் படிதான்ரண்டு
இதமான மூன்செயநீர் படிதான்வாரு
வட்டப்பா கலக்கியதை யடுப்பிலேற்றி
வளமாகக் காய்ச்சியதை யிறக்கிடாய்நீ
அட்டப்பா இந்தவிதம் ஏழுதரங்காய்ச்சு
ஆனதொரு இக்குழம்பை ரவியில்வைநீ
நட்டப்பா தயிலமது கல்லுப்பாச்சு
நல்லதயிலங் கல்லாய்ப் பூக்கும்பாரே. (107)

கல்லுப்பின்பெயர்.

கல்லப்பா இக்கல்லை ஆர்தான்சொன்னார்
கனமான தயிலமடா காட்டொண்ணாது
வல்லப்பா சத்தியது வெடியுப்பாச்சு
வளமான சிவமதுதான் கல்லுப்பாச்சு
நல்லப்பா இஃதிரண்டுங் குருதானாச்சு
நலமாக இதனுடைய பேரைக்கேளு
அல்லப்பா ஆநந்த உப்பென்றுஞ் சொல்வார்
அப்பனே நந்தியுப்ப நாதியுப்பே. (108)

உப்பான கல்லுப்பு பொட்டலுப்பு
உத்தமனே பூநீற்றுப் பென்றே சொல்வார்
அப்பான சலஉப்பு சமுத்திர உப்பு
ஆனதொரு கேசரத்துப் பென்றே சொல்வார்
கப்பான கம்பியுப்புக் கந்தனுப்பு
கனமான கல்லுப்பு வெடியுப்பென்றும்
அப்பான பளிங்குப்புப் பாறையுப்பு
அடவான கார உப்புச் சார உப்பே. (109)

வெடியுப்புக்கட்டு.

சாரான பாறையுப்பு அட்டுப்பாச்சு
சார்வான சத்திசிவ உப்புக்குத்தான்
கூரான குருவண்டு உப்புக்குத்தான்
குணமான இத்தனை பேர்க் கூறினார்பார்
ஆரான வெடியுப்புக் கட்டுக்கேளு
அப்பனே முன்விந்தால் சுருக்குசாமம்
வாரான சுத்தசலம் சாமம்ரண்டு
வளமாகப் புளியதனுற் கவசங்கட்டே. (110)
கட்டடா விந்ததனுற் சீலைசெய்து
கனகமதைப் புடம்போட உருகிக்கட்டும்
வட்டடா கட்டெடுத்துச் சொல்லக்கேளு
வளமான செம்பதிலே பத்துக்கொன்று
அட்டடா ஈந்திடவே பத்தரைமாற்ருகும்
அப்பனே ஈயத்திற் கொடுத்துப்பாரு
நட்டடா நாகவெள்ளி பத்தரைதானகும்
நலமான கட்டதனைப் பதனம்பண்ணே. (111)

கல்லுப்புக்கட்டு.

பண்ணடா கல்லுப்புக் கட்டுக்கேளு
பரிந்தைங் காயம்வாய்நீ ரரைத்துப்பூசி
வெண்ணடாமுலைப்பாலாற் சீலைசெய்து
வேதாந்தப் புடம்போட இருகிக்கட்டும்
சண்ணடா செம்பைத்தா னுருக்கிக்கொண்டு
சமர்த்தாக அதனிலே கடுகளவுபோடு
அண்ணடா பதினுறும் பழுத்துப்போகும்
அப்பனே ஈயத்திற் கொடுத்துப்பாரே. (112)

வெடியுப்புச்சுண்ணம்.

பாரப்பா சந்திரன்தான் உதயம்போலாம்
பார்தனிலே விள்ளாதே பதனம்பண்ணு
ஆரப்பா வெடியுப்புச் சுண்ணங்கேளு
அப்பனே வெடியுப்புக் கல்வத்திட்டு
ஏரப்பா சிவமுப்பூச் சுண்ணங் கழஞ்சிபோடு
இதமாக முன்செயா ரதனலாட்டி
வாரப்பா வில்லைசெய்து புடத்திற்போடு
வளமாகச் சுண்ணும்பாய் நீறிப்போமே. (113)

கல்லுப்புச்சுண்ணம்.

போமப்பா கல்லுப்புச் சுண்ணங்கேளு
புகழ்பெரிய கல்வமதில் கல்லுப்பிட்டு
ஆமப்பா சத்தி முப்பூச் சுண்ணம் விராகன்போடு
அப்பனே பழச்சாற்றால் சாமமாட்டு
வாமப்பா வழித்தெடுத்து வில்லை செய்து
வளமாக ரவியுலர்த்திப் புடத்தைப்போடு
காமப்பா கனகமது சுண்ணும்பாய்ப்போகும்
கருத்தான கற்சுண்ணம் பதனம்பண்ணே. (114)

பண்ணப்பா வேதைக்கு மாட்டினுக்கால்
பாங்கான சொர்னமதாய் விளையும்பாரு
அண்ணப்பா வாதவித்தை கோடிகோடி
அப்பனே யாகுதென்று செய்யவேண்டாம்
ஒண்ணப்பா யோகத்தைப் பாருபாரு
உகம்உகமாய்க் காயமதை நிறுத்திக்கொள்ளு
வண்ணப்பா வைத்தியமொடு ஞானம்பாரு
வளமாக நல்வினையைத் தேடிக்கொள்ளே. (115)

வெடியுப்பு-செயநீர்.

கொள்ளவே யென்னுடைய நூல்பார்த்தோர்க்குக்
குணமாக நல்வினைகட் சேரும்பாரு
விள்ளவே யான்விண்டேன் பொருளையப்பா
விதமாக என்னைப்போல் விள்வாரில்லை
அள்ளவே வெடியுப்புச் செயநீர்கேளு
அப்பனே வெடியுப்புப் பலமொன்றப்பா
கள்ளப்பா கந்தனுப்புப் பலமொன்றப்பா
கனமான முப்பூச்சுண்ணம் பலமொன்றாமே (116)

ஒன்றான பீங்கானி லிவைமூன்றிட்டு
உத்தமனே முன்செயநீர் கொஞ்சம்வாரு
வன்றான மதிதனிலே வைத்திட்டாக்கால்
வளமாக ரேகித்து ஜெயநீராகும்
நன்றான செயநீரை யெடுத்துக்கொண்டு
நலமான குப்பிதனில் பதனம்பண்ணு
அன்றான வாலைதனைப் பூசைபண்ணில்
அமுர்தம்போ லிந்நீருந் தோன்றுந்தானே. (117)

---

* வில்லைசெய்து ரவியிற்காயவைக்கவும்.

கல்லுப்பு-செயநீர்.

தோன்றுமடா கல்லுப்புச் செயநீர்கேளு
சொற்பெரிய கல்லுப்பு பலமொன்றப்பா
ஆன்றுமடா அண்டவிந்துப் பலமொன்றிட்டு
அப்பனே யிவைரண்டும் பீங்கானில்வைத்து
வான்றுமடா சித்திரைதான் ரவியில்வைக்க
வளமாகச் செயநீரா யுருகிப்போகும்
நான்றுமடா குப்பிதனில் பதனம்பண்ணு
நாயகியைப் பூசைசெய்து அடக்கம்பண்ணே. (118)

குருஅண்ட-செயநீர்.

பண்ணடா வாதிகளே யிவைரண்டால்தான்
பரிவான உப்பெல்லாஞ் செயநீராகும்
நண்ணடா குருவுப்புச் செயநீராச்சு
நலமான குரு யண்ட செயநீர்க்கேளு
வண்ணடா சிப்பிவொன் றெடுத்துவந்து
வளமான கபாலவிந்து அதனிற்போட்டு
அண்ணடா புளிசெயர்நீ ரதனில்வாரு
அப்பனே சிவப்பூச் சுண்ணம்போடே. (119)

போடப்பா கனலிலே வைத்திட்டாக்கால்
புகழ்பெரிய செயநீராய்த் தெளிந்துநிற்கும்
வாடப்பா குப்பிதனில் பதனம்பண்ணு
வளமான செயநீரைப் பூசைபண்ணு
நாடப்பா அண்ட செயநீர்க்கு நிகரொன்றுண்டோ
நலமான செயநீர்தான் குருவுமாச்சு
காடப்பா இதனாலே செயநீர்கோடி
கனமாகக் குருசெயநீர் சேர்த்துஆட்டே. (120)

ஆட்டவே இதுமூன்றும் பிரம்மாவிஷ்ணு
ஆனதோ ருருத்திரனு மமர்ந்தார்பாரு
வாட்டவே இவர்மூவ ராலேயப்பா
வளமாக சத்தசா கரங்களாச்சு
பாட்டவே பாடிவிட்டே னென்றெண்ணாதே
பரிவான பொருளப்பா பாட்டெல்லாந்தான்
நாட்டவே மனுஷருக்குக் காயந்தேற
நலமாக இத்தனையும் நாட்டினேமே. (121)

நாட்டினே முன்னோர்கள் வாக்கியமென்று
நலமாகப் பூசைசெய்தாற் பதவியாச்சு
நாட்டினே மிப்பிறப்பி லிராசி யில்லாவிட்டால்
நலம்பெறவே மறுபிறப்பிற் சித்தனுவான்
காட்டினே மிப்பிறப்பிற் சாஸ்திரம்பார்த்துக்
கடிதாகக் கர்மத்தை யெண்ணினோர்க்கு
மாட்டினே மறுபிறப்பில் நல்வினைகளெய்து
மகத்தான முப்பிறப்பின் துலாராசியோர்க்கே. (122)

இராசியறியும்படி.

இராசிதா னிருந்தோர்கள் சாஸ்திரம் பார்த்தால்
இரவில்தான் ராஜாளி யெடுத்தாற்போல
வாசிதான் கொண்டுவிடுங் கேசரத்தில்
வளமாக நல்லோர்க்கிவ் விதமாம்பாரு
நாசிதா னோடாது சுழியைக்காட்டும்
நலமான வொன்பதிலே போகாதப்பா
காசிதான் போனாலு மென்னவாகுங்
கடிதான கோபமுடன் சூதைத்தள்ளே. (123)

தள்ளவே வஞ்சனையும் பொய்யுமாகா
தனதாக விருநெஞ்சுப் படைக்கலாமா
வள்ளவே மோகமுடன் மாய்கையாகா
வளமாக நிந்தையொடு அபாண்டமாகா
அள்ளவே கள்ளம்பொய்ச் சாக்ஷியாகா
அருளுடைய குருநிந்தை யாகாதப்பா
கள்ளவே வஞ்சியுட சாபமாகா
கனமான சீவசெந்தை வதைசெய்யாதே. (124)

ஞானத்தின் சூட்சம்.

செய்யவே யிவையெல்லாந் தள்ளினோர்கட்
செயலான துலாத்தினுட ராசியாவார்
ஐயவே ஒன்பதா மாதத்திற்றான்
ஆனதொரு நல்வினைகள் தொல்வினைகளீவார்
நையவே நல்லோர்க்கு நல்வினைகளீவார்
நலமாகப் பிரமனருள் நடக்கும்பாரு
நையவே இப்பிறப்பில் நல்வினைகட் செய்தால்
நலமான மறுபிறப்பில் பதவியாச்சே. (125)

ஆச்சப்பா நல்வினைகள் திறந்துசொன்னேன்
அப்பனே தொல்வினைக ளறிந்துச்சொன்னேன்
வாச்சப்பா இவ்விதமா யிருக்காமூடர்
வளமாக நூல்பார்த்தா லென்னவாகுங்
காச்சப்பா கர்மிகட்குச் சாஸ்திரமாமோ
கனமான சிவயோகிக் காகும்பாரு
நாச்சப்பா சிவயோகி யானுக்கால்தான்
நலமான சாஸ்திரத்தைப் பார்த்துச்சேரே. (126)

சேரப்பா சாஸ்திரத்தைத் தொகையாய்ப்பாரு
செம்மையுள்ள கருக்களெல்லாந் தொகையாய்க்காணும்
பாரப்பா வழிதுறையுஞ் செவ்வைகண்டால்
பலமான சித்தனென்ன சித்தன்சித்தன்
காரப்பா சற்குருவைக் காருகாரு
கனமான வழிதுறையுங் காணுங்காணும்
நாரப்பா நந்தியொளி கண்ணிற்காணும்
நலமான ஞானத்தின் சூட்சம்பாரே. (127)

பாரப்பா ஞானத்தின் சூட்சங்கேளு
பகரறிய வழலைமுறை யறியவேண்டுங்
காரப்பா கண்ணோட்ட மறியவேண்டுங்
கனமான சௌந்தரியை யறியவேண்டும்
வாரப்பா வாசியைத்தா னறியவேண்டும்
வளமான ஊமையனை யறியவேண்டும்
நாரப்பா நந்தியொளி காணவேண்டும்
நாதாந்த முப்பூவை யறியவன்றே. (128)

அறியவே வாசியுட மகிமைசொன்னேன்
ஆனதொரு ஊமையெழுத் ததனைச்சொன்னேன்
வறியவே வாலையுட மகிமைசொன்னேன்
வளமான சல்லிவே ரறியச்சொன்னேன்
கறியவே வாதத்தின் பொருளைச் சொன்னேன்
கனமான ஞானத்தின் றனுக்கஞ் சொன்னேன்
நறியவே நாதாக்கண் மறைப்பு சொன்னேன்
நலமான ஜெயநீர்கட் சொன்னேன்பாரே. (129)

சொன்னனடா முப்பூவின் சூட்சஞ்சொன்னேன்
சொற்பெரிய விந்தினிட மகிமைசொன்னேன்
நன்னனடா நாதத்தினமுர்தஞ் சொன்னேன்
நலமான குருஅண்டச் சுண்ணஞ் சொன்னேன்
வன்னனடா வழிதுறைக ளறியச்சொன்னேன்
வளமான ஞானத்தின் தர்மஞ் சொன்னேன்
கன்னனடா உவப்புகை செயநீர் சொன்னேன்
கனமான அண்டசெய நீர்சொல்வேனே. (130)

சொல்லவே சாஸ்திரத்தை விரித்துச் சொன்னேன்
சொற்பெரிய மூடர்கள்தா னறியார்பாரு
அல்லவே யான்சொன்னாற் போலேயப்பா
ஆருந்தான் சொல்லார்க ளறிந்துபாரு
வல்லவே சொல்லிவிட்டேன் வழியாயப்பா
வளமான என்னூல்யார் கொடுக்கப்போரார்
நல்லவே என்னூல்தான் உலகத்தோர்க்கு
நலமாக என்னூல்தான் கிட்டாதென்றே. (131)

கிட்டுமப்பா கிட்டினல் கோவைப்பாரு
கிடையாத சாஸ்திரந்தான் நூல்கற்றோர்க்கு
மட்டுமப்பா மடையருக்குக் கிட்டாகிட்டா
மகத்தான ஞானிகள்தான் நூலைக்காப்பார்
வட்டுமப்பா நூல்பார்த்தோர் உழைப்பார்பாரு
வளமான சண்டிமாடு பார்த்தாலென்ன
நட்டுமப்பா சாவிபென்ன பட்டும்பாழாம்
நலமாக பொய்சூது தள்ளினோர்க்கே. (132)

தள்ளடா கோபமுடன் பொய்ச்சூதைத்தள்ளு
தனமாக இவை மூன்றுந் தள்ளினோர்க்கு
வள்ளடா வாதந்தான் சித்திக்கும்பார்
வளமான நாற்றுறையுங் காண்பார்பாரு
நள்ளடா என்தேசம் உத்ரதேசம்
நலம்பெரிய என்னுடைய கிரந்தஞ்சொன்னேன்
விள்ளடா யதைப்பிரித்துத் தமிழாய்ச்சொன்னேன்
விதமாக வென்னுடைய சாஸ்திரம்பாரே. (133)

பாரப்பா என்மொழியைப் பழித்தோர்க்குத்தான்
பரப்பிரமன் வல்வினைக ளெய்தும்பாரு
ஆரப்பா என்மொழியைக் கண்டபேர்கள்
ஆனப் பிறப்பில் சித்த னாகாவிட்டால்
வாரப்பா மறுபிறப்பில் சித்தனுவான்
வளமான இரக்கத்தை யெண்ணு எண்ணு
நாரப்பா நல்லோர்க்கு மோட்சமோக்ஷம்
நலமான * புல்லோர்க்கு நரகந்தானே. (134)

கருவிகளறியும்படி.

தானப்பா நரகில் வீழ்ந் தலைவார்பாரு
தனதான நல்லோர்க்கு மோட்ச மோட்சம்
வானப்பா வழிதுறையாய்ச் சொல்லிவிட்டேன்
வளமான என்னிகண்டு இது தானப்பா
கானற்பால் மதியமுர்தங் கொண்டபேர்கள்
கனமான சாயுச்சியப் பதவியாவார்
நானப்பா சொல்லிவிட்டேன் முறையாய்ச்செய்தால்
நலமாக முறைபாகஞ் செய்பாகங்காணே. (135)

முறையப்பா முறையாகச் சொல்லிவிட்டேன்
முடியான அடிநடுவு மூன்றுமாச்சு
அறையப்பா ஒன்றுமில்லை பிரமாவிஷ்ணு
ஆனதொருஉருத்திர னு மமர்ந்தார்பாரு
வறையப்பா அகாரமுடன் உகாரம் இகாரம்
வகையாக இவைமூன்று முயிர்தானப்பா
மறையப்பா அதிமறைகள் வேதமாச்சு
மகத்தான கொடிமுடியும் மூன்றுமாச்சே. (136)

ஆச்சப்பா ஆதியந்தம் பனிநீராச்சு
அப்பனே அண்டமுடன் விந்துநாதம்
காச்சப்பா வஸ்துவுடன் மதுமாங் கிஷமுமாகும்
கனத்ததொரு ஐம்பூத மதற்குள்ளாகும்
வாச்சப்பா ஆதார மேலாதாரம்
வளமான கருவிகள்தான் தொண்ணூற்ருறும்
நாச்சப்பா இதிலடக்கந் தொண்ணூற்ருறும்
நலமான சத்தமொடு பரிசமாமே. (137)

* புல்லோர்-தீயோர்.

போய்ஞ்ஞானி.

ஆமப்பா கருவிகள்தா னிவ்வாருரும்
அப்பனே குருவென்ன கருதானுகும்
பாமப்பா பாழ்ஞ்ஞானி யுலகஞானி
பசப்பாகப் பசப்புகிற ஞானிக்கூற்கேள்
வாமப்பா யோகமது செய்வே னென்பான்
வளமான கற்மியடா பொய்ஞ் ஞானயோகி
நாமப்பா வையகத்தில் மௌனமாக
நலமுடனே வாய்மூடிப் பசப்புவானே. (138)

வானப்பா வாய்மூடி மான்பரோடே
வளமாக கைக்காட்டிக் கண்ணால் மயக்குவான்பார்
ஆனப்பா மனிதர்களு மதிமயங்கி
ஆனதொரு கைக்குள்ளே பொருளும் ஈவார்
கானற்பால் மதியமுர்தங் கொண்டேனென்பார்
கனமானகள்ளுஞ் சாராயங் கொள்வார்
நானப்பா யோகமது செய்தேனென்பார்
நலமிலாக் காமபோகஞ் செய்வார் பாரே. (139)

செய்யப்பா வாசிவசஞ்செய்தேனென்பார்
செயமான கன்னிப்பெண்ணை வைத்துச்செய்வார்
வையப்பா வாதமது செய்வேனென்பார்
வளமாகப் பொன்னைவைத்து மாருட்டஞ் செய்வார்
நெய்யப்பா இதுவெல்லாஞ் சித்தர் வேடிக்கைப் பார்ப்பார்
நிசமில்லாப் பொய்க்குருக்கள் மகிமைபாரு
ஐயப்பா இத்தேசம் விட்டுப்போவார்
அப்பனே மறுதேசத்தில் மயக்குவாரே. (140)

உருமாற்றமைச்சித்தர்.

வாரப்பா அவர்வயிறு பிழைக்கவேண்டி
வளமாகப் பலவிதமா வேஷஞ்செய்வார்
ஆரப்பா அவர்கள்தான் பொய்க்குருக்கள்
அப்பனே மாற்றமைச் சித்தர்கேளு
நாரப்பா உலகத்தி லேழைப்போலே
நலமாகத் திரிவார்கள் நவிலக்கேளு
காரப்பா நிமிஷத்தில் மாற்றமையிட்டுக்
கருவாக உருமாற்றித் திரிவார்பாரே. (141)

திரிந்துகொண்டு உலகத்தில் புதுமைப்பார்ப்பார்
திருவான விஷ்ணுமயக் கூத்தை பார்ப்பார்
மறைந்துகொண்டு தேசாதி தேசந்தோறும்
வளமான அதிசயங்கள் காண்பார்பாரு
அறிந்துகொண்டு அவரடியைப் பூசைபண்ணி
ஆனதொரு சாத்திரத்தைச் சேர்த்தேனென்று
கரிந்துகொண்டு அவர்கண்ணில் காட்டினுக்கால்
கனமாகக் கைப்பாகங் காட்டுவாரே. (142)

காட்டாமல் சாஸ்திரந்தா னில்லாவிட்டால்
கனமான தொழில்வர்மஞ் சொல்லார்பாரு
வாட்டாம லவர்வற்மஞ் சொல்லினுக்கால்
வளமாக அவர்க்கெதிரி நீயென்றெண்பார்
ஆட்டாமல் கோவைசாத்திர மில்லாவிட்டால்
அப்பனே சாட்சியில்லை என்றெண்பார்பார்
தாட்டாமல் கோவைநூல் சேர்த்துக்காட்டு
தனதான என்னுடைய சாஸ்திரம் பார்ப்பாரே. (143)

பார்த்தாக்கா லவர்மனது கனிந்துகொண்டு
பரிவான தன்வந்திரி சாஸ்திரமென்று
கார்த்தாக்கா வுழைப்பாளி யென்றுசொல்லிக்
கருத்தான சாஸ்திரத்தின் சாட்சிசொல்வார்
மார்த்தான மற்றோர்க்குச் சொல்லார் சொல்லார்
மகத்தான சிவயோகி தனக்குச்சொல்வார்
ஆர்த்தாக்கால் கர்மிகட்குக் கண்ணில்தோற்றார்
அப்பனே நல்லோர்க்குத் தோனுவாரே. (144)

வைத்திய சூக்ஷமெழுகு.

தோணவே வைத்தியத்தின் சூட்சங்கேளு
தொகுப்பான நரியிறைச்சி செய்யும்வாங்கி
வாணவே தலைப்பிண்டம் நெய்யும்வாங்கி
வளமான கருங்கோழி நெய்யும்வாங்கி
காணவே அண்டமுப்பூ தானுங்கூட்டிக்
கனமாக இவைநான்குங் கல்வத்திட்டு
ஆணவே நாற்சாம மாட்டினுக்கால்
ஆனதொரு மெழுகாகும் பரணிதனில் வையே. (145)

வையப்பா வாலைக்குப் பூசைபண்ணி
வளமாகப் பற்பஞ்சிந் தூரத்திற்கும்
ஐயப்பா அதில்கடுகு கொடுத்திட்டாக்கால்
அப்பனே சிந்தூரமொடு பற்பமாகும்
நையப்பா நையாத சரக்கெல்லாந்தான்
நன்ருகச் சித்திக்கு மறுபத்துநாலும்
கையப்பா நவலோக மிதனுல்மாளும்
கனமான உப்புவகை மாண்டு போமே. (146)

வைத்தியசூக்ஷமுப்பு.

போகுமடா வைத்தியத்தின் குருதானுகும்
பொருளான வஸ்தோட மெழுகாமிந்த
வாகுமடா மெழுகிது தா னுகும்பாரு
வளமான மெழுகிதுதான் வகுத்துப்பாரு
ஏகுமடா வைத்தியத்தின் சூக்ஷமுப்பூ
என்மகனே சொல்லுகிறே னறிந்துபாரு
நாகுமடா நல்லோர்க்குச் சூட்சஞ்சொன்னேன்
நலமான வயித்தியரே கேட்டிடீரே. (147)

கேளப்பா தலைப்பிண்டங் கொண்டுவந்து
கெணிதமாய வற்றலா யுலர்த்திக்கொண்டு
வாளப்பா பூநீறு படிதானென்று
வளமான பனிநீரு படிதான்ரண்டு
ஆளப்பா கலக்கியதை தெளிவைவாங்கி
அப்பனே பாண்டத்தி லூற்றிக்கொண்டு
நாளப்பா அதில்பிண்டம் போட்டுக்காய்ச்சு
நலமாகச் சயிலெண்ணெய்க் கக்கிப்போமே. (148)

போமப்பா எண்ணெய்கக்கி வெளிறுதட்டும்
புகழான பிண்டமதை ரவியுலர்த்திக்
காமப்பா ரவியுலர்த்திக் கல்லுரலில்தாக்குக்
கனமான உலக்கைகொண்டு சாடுசாடு
வாமப்பா சாடயிலே தூளாய்ப்போகும்
வளமான நூளெடுத் தரித்துக்கொண்டு
நாமப்பா நூளெடுத்துப் பாண்டத்திட்டு
நலமான சுத்தசலம் படிதான்வாரே. (149)

வாரப்பா கலக்கியதைத் தெளியக்காய்ச்சு
வளமாக்காய்ச் சயிலசுண்ணம் படரும்பாரு
ஆரப்பா அப்பதத்தி லிறக்கிக்கொண்டு
அப்பனே துல்லியமுள்ள அகலப்பீங்கான்
காரப்பா கலக்கியதைப் பீங்கானில்வார்த்துக்
கனமான செம்பூமிக் கேகிக்கொண்டு
நாமப்பா நற்சதுர மேடைபோட்டு
நலமாக அதின்மீதில் வைத்துப்போற்றே. (150)

போற்றப்பா பதினாறு நாளைக்குள்ளே
பொருளான முப்பூவும் பூக்கும்பாரு
ஆற்றப்பா சித்திரையும் பங்குனியுமாகும்
ஆனதொரு வைகாசி மெத்தநன்று
வாற்றப்பா ஆனியிவை நாலுமாகும்
வளமான முப்பூவும் பூக்குங்காலம்
காற்றப்பா மேல்நோக்கி வீசுங்காலம்
கனமான காலமிது முப்பூச்செய்யே. (151)

செய்யப்பா முப்பூவை யெடுத்துக்கொண்டு
செயலான குப்பிதனில் பதனம்பண்ணு
ஐயப்பா அரனைநீ தியானம்பண்ணு
அப்பனே முப்பூவைப் பணிந்திடாய்நீ
வையப்பா வாமத்தின் பூசைபண்ணி
வளமான முப்பூவை யெடுத்துக்கொண்டு
கையப்பா சிந்தூரம் பற்பத்தோடு
கனமான லேகியங்கள் கிருதந்தானே. (152)

தானான தயிலமொடு எண்ணெய் நெய்தான்
தானக்கான புடைத்தயிலம் சரக்குவைப்பு
வேனான கியாழமொடு மாத்திரைதானும்
வேதாந்தக் குழம்புகளுங் கட்டுத்தானும்
ஆனான ரணவைத்திய மிவைகட்கெல்லாம்
அப்பனே யிக்கருவைக் கடுகளவுமாட்டு
கானான கனகமுள்ளோன் வைத்தியனென்பார்
கடிதான உலகினில்சற் குருதானுமே. (153)

ஆமப்பா வயித்தியர்க்குக் குருதான்வேணும்
அப்பனே குருவைவிட்டா லெல்லாம் பொய்யாம்
காமப்பா உழைத்தோருக் கெல்லாமெய்யாம்
கடிதான உலகசிவ யோகிநீதான்
வாமப்பா உன்முகத்தைக் கர்மநோய்க்கண்டால்
வளமாக கெடிகெட்டுப் பயந்தோடிப்போம்
நாமப்பா முன்சொன்ன மெழுகுவேணும்
நலமான முப்பூவும் வேணும்பாரே. (154)

பாரப்பா மெழுகுகொண் டறுபத்துநாலும்
பரிவாகக்கொல்லுதற்கு மெழுகுவேணும்
ஆரப்பா நவலோக மெல்லாமாளும்
அப்பனே சஞ்சீவி மெழுகாலப்பா
வாரப்பா வயித்திய துறையுங்காணும்
வளமான வயித்தியர்க்கு நல்வினைதானுச்சு
காரப்பா கனகசபை நடனங்காணும்
கனமான சிவனுமையுங் காணலாச்சே. (155)

ஆச்சப்பா வயித்தியனே நோயாளித்தான்
அப்பனே யவனழைக்கும் வகைதான்கேளு
வாச்சப்பா என்னுயிர்க்குத் தெய்வமென்பார்
வளமாக நோய்தீர்ந்தால் சலிப்புத்தோன்றும்
காச்சப்பா முழுதிலுந்தான் தீர்ந்துபோனல்
கடிதான பகையாளி வந்தானென்பார்
நாச்சப்பா பகையாளி பணத்திற்குத்தான்
நலமான பணத்தாசை யுள்ளோர்பாரே. (156)

பாரப்பா அவரிடத்திற் செல்லவேண்டாம்
பகரரிய தர்மத்தை யெண்ணிச்செய்நீ
ஆரப்பா அவர்தனக்கு நரகமாச்சு
அப்பனே வயித்தியர்க்கு மோக்ஷமாச்சு
வாரப்பா வயித்தியனுட வித்தையப்பா
வளமான பிரமாவின் வித்தைப்பாரு
நாரப்பா நரஜன்மம் பிறந்தாலென்ன
நல்ராசியு ளோன்பிறக்க வேணுந்தானே. (157)

வேணுமென்ன சகலகலை கற்கவேணும்
வேதாந்த சாஸ்திரத்தை யறியவேணும்
ஆணுமென்ன பிறக்கிறது நல்லோரப்பா
அதிலுந்தான் கூன்குருடு முடவனுகா
காணுமென்ன இவைதள்ளிப் பிறந்தோருக்குக்
கனமான நல்லோராய்ப் பிறப்பாரையா
நாணுமென்ன இவை தள்ளிப் பிறந்தோருக்கு
நலமான சாயுச்சியப் பதவிதானே. (158)

நானுன ஆணவத்தால் கெட்டுப்போவார்
தனதான புத்தியுள்ளோர் தேர்வார்பாரு
மானுன மாய்கையினல் மதத்தால்தானும்
மகத்தான தீவினைக ளடர்ந்துப்போச்சு
வேனுன வேதாந்த சாஸ்திரம் பார்த்தாலும்
வீணப்பா தேரார்கள் வீணர் வீணர்
காணுன அவர்பிறந்த ஜன்மக்கூறு
கழுதையடா அவர்பிறப்பு மட்டிமாடே. (159)

மாடப்பா அவனுக்கு சாஸ்திரமென்ன
மகத்தான சிவயோகி புத்தியுள்ளோன்
ஆடப்பா புத்திமான் சாஸ்திரம் பார்த்தால்
அப்பனே யட்சணத்தில் தேர்வான்பாரு
வாடப்பா வாசியைத்தான் புத்தியாலே
வளமாகக் கூடினவன் புத்தியுள்ளோன்
நாடப்பா சிவயோகிக் கூட்டிக்கொள்வான்
நலமான வாசியா லெல்லாமாச்சே. (160)

ஆச்சப்பா எல்லாந்தான் கற்றுலென்ன
அப்பனே சாகாக்கல்விக் கற்கவேணும்
வாச்சப்பா சாகாம லிருந்துகொண்டு
வளமான அறுபத்து நாலுமாடு
காச்சப்பா கனகசபை நடனங்காணும்
கனமான திரிலோகஞ் சுற்றிவாரீ
நாசச்பா வாசிகண்டால் நந்தியொளிகாணும்
நலமான அஷ்டசித்தி கைக்குள்ளாச்சே. (161)

புருடருக்குவசியமாத்திரை.

ஆச்சடா வயித்தியருக் கொன்று சொல்வேன்
அப்பனே தேவாங்கின் கண்ணும் பித்தும்
நாச்சடா ஆந்தையுட பித்துங்கூட்டு
நலமான கருங்காகப் பித்துங்கூட்டு
வாச்சடா கருங்கோழிப் பித்துங்கூட்டு
வளமான நரியினுட பித்துங்கூட்டு
காச்சடா கருங்குருவி பித்துங்கூட்டு
கனமான உடும்பினுட பித்துங்கூட்டே. (162)

கூட்டடா என்மகனே சொல்லுவேன்பாரு
குருவான கன்னிப்பெண் நாதங்கூட்டு
வாட்டடா சாரையுட பித்துங்கூட்டு
வளமான பச்சோந்தி பித்துங்கூட்டு
நாட்டடா புல்லாமணக்குங் கூட்டு
நலமான சிறுபூனைக் காலிவேரும்
காட்டடா லவங்கமொடு சாதிக்காயும்
கனமான பத்திரியும் புனுகுங்கூட்டே. (163)

கூட்டவே வகைக்குமொரு கழஞ்சுகூட்டிக்
குறிப்பான கல்வத்திற் போட்டுக்கொண்டு
ஆட்டவே கன்னியுட நாதம்விட்டு
அப்பனே சாமமது ரண்டுமாட்டு
காட்டவே சுத்தசலம் விட்டுஆட்டு
கனமான மெழுகுபதந் தன்னைப்பார்த்து
வாட்டவே யுண்டைமணி போலுருட்டி
வளமான நிழலுலர்த்திச் செப்பில்வையே. (164)

வையடா வயித்தியரே மணிதருக்கு
வளமான கருவுகடு கனவெடுத்து
நையடா நோய்வந்த போதிலேதான்
நலமாகக் கொடுத்துவிடு ஒருபோதில்தான்
கையடா மறுபொழுது நோய்க்கௌழ்த மீய்நீ
கைகண்ட வித்தையடா உந்தனுக்கு
மையடா மதிமயங்கிநீ கேட்டதெல்லாம்
மகத்தான வயித்தியனென் றீய்வார்பாரே. (165

மதிமயக்கப்பொடி.

ஈயவே ஸ்ரீகட்குத்தன் பஞ்சக்கருவெடுத்
தியல்பாகக் கொடுத்துவிடு அதிமோகமாவார்
வாயவே மகத்தான ஈடுசொன்னேன்
வளமான மதிமயக்கப் பொடியைக்கேளு
ஆயவே குருவான திகைப்பூடோடு
அப்பனே யிந்திரகோபங் குழியானைக்கூட்டு
மாயவே தும்பியுடன் சுழல்வண்டப்பா
மகத்தான பச்சைப்பாம்பு னஞ்சுதானே. (166)

நஞ்சான வல்லூறின் நஞ்சுகூட்டு
நலமான அடைக்கலத்தின் நஞ்சுங்கூட்டு
வஞ்சான*வக்கணத்திநஞ்சுக்கூட்டு
வளமானகருங்குரங்குநஞ்சுக்கூட்டு
அஞ்சானகரும்பூனைநஞ்சுக்கூட்டு
அப்பனேகருப்புநாய்நஞ்சுக்கூட்டு
கஞ்சானகடைமருந்து சரக்கைக்கேளு
கருவான மதனப்பூ கஞ்சாவித்துங்கூட்டே. (167)

கூட்டப்பா மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள்
குருவான குங்குமப்பூ சந்தனத்தூள்
வாடப்பா பச்சைக்கர்ப் பூரங்கஸ்தூரி
வளமான சவ்வாது புனுகுங்கூட்டு
ஆட்டப்பா அதிமதுரஞ் சுக்குங்கூட்டு
அப்பனே¶காடாற்று முன்னெலும்புக் கூட்டு
நாட்டப்பா வெட்டிவேர் விலாமிச்சோடு
நலமாகத் தொட்டாக்கால் வாடிவேரே. (168)

வேரோடு செந்நா யுருவிவேரும்
வேதாந்த பொற்கையான் வேருங்கூட்டு
ஆரோடு விட்டுணுமூலி வேருங்கூட்டு
ஆனதோர் கருமத்தின் வேருங்கூட்டு
நாரோடு வெண்தாமரையின் கிழங்குக்கூட்டு
நலமான சிறியநங்கைப் பெரியநங்கை
வாரோடு ஆலின்மேற் கட்டுக்கொடியும் வாங்கு
வளமான வேருந்தான் கூடச்சேரே. (169)

* வக்கணத்தி-நாமநாத்தி.
¶ காடாற்றுமுன்னெலும்பு-மயானத்திற்பிணஞ்சுட்டஎலிம்பு.

சேரப்பா செங்கழுநீர்ப் பூவுங்கூட்டு
சிறப்பான¶சிதேவி†குமரிவேரும்
ஆரப்பா ×நஞ்சுபாலைவேருங்கூட்டு
அப்பனே¶நரிமிரட்டி வேருங்கூட்டு
வாரப்பா வெண்குன்றி வேருங்கூட்டு
வளமான ÷கருக்கையான்வேருங்கூட்டு
காரப்பா +நீலிநு யுருவிவேரும்
கனமான ஆலின்கீ ழாலின்வேரே. (170)

வேரான முத்தமொடு தேவதாரம்
வேதாந்த ஆனையுட நெருஞ்சில்கூட்டு
ஆரான §மேனிவேர் தானுங்கூட்டு
அப்பனே யெழுத்தாணிக்கூர் பச்சிலையுங்கூட்டு
வாரான ஆகாசக் கருடக்கிழங்கும்
வளமான ஆகாசத் தாமரையுங்கூட்டு
கூரான ஐம்பத்து நாலுமாச்சு
குறிப்பாக வகைக்கிரண்டு கழஞ்சுகூட்டே. (171)

கூட்டடா வேர்வகைகள் சூரணமேசெய்து
குருவான கடைமருந்து சூரணமேபண்ணி
வாட்டடா அகலமுள்ள சட்டிதன்னில்
வளமாகச் சுத்தசலம் படிரண்டிட்டு
நாட்டடா இந்தவகை சூரணங்க ளெல்லாம்
நலமாகக் கொட்டியதின் மேலேவைத்து
காட்டடா சுத்தஜலமேல் தெளித்துச்சட்டி
மூடிகன மானசீலைமண் செய்துலர்த்தே. (172)

¶ சிதேவி-பொன்னங்காணி.
† குமரி-கற்றாழை-
× நஞ்சுபாலை-கழுதைப்பாலை.
¶ நரிமிரட்டி-கிலுகிலுப்பை.
÷ கருங்கையான்-கறுப்புக்கரிசலாங்கண்ணி
+ நீலி-அவுரி.
§ மேனி-குப்பைமேனி.

உலர்த்தடா அடுப்பேற்றித் தீயைமூட்டி
உத்தமனே யொருஜாம மெரித்தாயானல்
வலர்த்தடா கடுங்காரம் பித்தமேறும்
வகையாக இறக்கிகொண்டு சீலைவாங்கு
மலர்த்தடா பீங்கானில் போட்டுக்கொண்டு
மகத்தான நிழலுலர்த்தி யெடுத்துக்கொள்ளு
அலர்த்தடா புதுக்கலயந் தன்னிற்போட்டு
அணிசவாது புனுகுபூரம் வெட்டிவேர் தூளே. (173)

தூளான இவையெல்லாம் வாசங்கட்டித்
துருவான மஞ்சள்சீலைக் கலயஞ்சுற்று
ஆளான வயிரவர்க்கு வாலைப்பூசைசெய்து
அப்பனே மோகினிமந் திரந்தான்சொல்லு
மாளான-மங்-றங்-கென்றே சொல்லு
மகத்தான-சிங்-வங்-மோகினி வாவாவென்று
நாளான மோகினிக்கு லட்சமோதி
நலமாகத் தூளெடுத்து மனிதர்மீதில்வீசே. (174)

வீசயிலே மதிமயங்கி சனங்கள்தானும்
வேதாந்தி சொன்னபடி நடப்பார்பாரு
ஆசையிலே ஸ்ரீகளுட பேரைச்சொல்லி
அப்பனே வீசிடுவாய் வேதாந்திநீதான்
மாசையிலே மதிமயங்கி மோகவெறிகொண்டு
மகத்தான ஸ்ரீகளப்பா வருவார்பாரு
காசையிலே கன்னியர்கள் கோடாகோடி
கனமான பணங்கேட்டால் ஈய்வார்பாரே. (175)

பாரடா ஞானிகளே யித்தொழில்கள்தானும்
பரிவாக உங்களுக்கு வேண்டாம்பாரு
ஆரடா இத்தொழில்கள் நிறுத்துக்கொண்டு
அப்பனே அறுபத்து நாலுமாடு
வாரடா வினேதவித்தை யிதுதானப்பா
வளமான யிதுவெல்லாந் தோஷந்தோஷம்
நாரடா மறைப்புமை யொன்றுகேளு
நல்லசித்தர்க் கதீதவித்தை யிதுதான்பாரே. (176)

உருமாற்றுமை.

தானான மறைப்புமை சொல்லக்கேளு
தருவான கருடனுட கண்ணும்வாங்கு
வானான கருங்கோழிக் கண்ணும்வாங்கு
வளமான காக்கையுட கண்ணும்வாங்கு
தேனான தேவாங்கின் கண்ணும்வாங்கு
திருவான அட்டையது பத்துங்கூட்டி
கானான கருங்குரங்குக் கண்ணும்வாங்கு
கருதிக்கேள் உடும்பினுடப் பித்துங்கூட்டே. (177)

கூட்டடா நஞ்சுபாலை வேரின்கீழே
குருவான வண்டுண்டு எடுத்துக்கூட்டு
நாட்டடா மணற்றவளைக் காட்டிலப்பா
நலமான சஞ்சீவி கருணையுண்டு
மாட்டடா எடுத்ததனைக் கூடச்சேரு
மகத்தான பெரியநங்கை சிறியாநங்கை
காட்டடா தலைப்பிண்டம் அமாவாசை தன்னில்
கருவாகச் செத்துதென்றால் கண்ணும்வாங்கே. (178)

வாங்கடா இவையெல்லாம் ரவியுலர்த்தி
வளமான கல்வத்திற் சூரணித்து
ஆங்கடா கன்னியுட நாதச்சீலை
அப்பனே யதிலிட்டுத் திறிதிறித்து
சாங்கடா தலைப்பிண்ட மண்டையோடுவாங்கி
சர்வாங்கந் தலைப்பிள்ளை நெய்யும்வாங்கு
நங்கடா அகல்தனிலே நெய்யைவார்த்து
நலமான திறியைநன்றாய் அகலிற்போடே. (179)

போடப்பா தீபமது ஏற்றிக்கொண்டு
புகழ்பெரியக் கபாலஓடு கவிழ்த்து மூடு
வாடப்பா தீபமது எரிந்ததானால்
வளமான கபாலத்தில் மைதான்பற்றும்
நாடப்பா மையைத்தான் வழித்துக்கொண்டு
நலமான கஸ்தூரி புனுகுபூரமும்
சாடப்பா மத்தித்து தங்கச் சிமிழில்வைத்து
சமனாக வழலைமுப்பூக் கொஞ்சங்கூட்டே. (180)

கூட்டியே சிமிழில்வைத்து வாமப்பூசைபண்ணி
குறியான * லாடமைதான் பணவெடைதான்போடு
வாட்டியே மூவுலகுங் காணமாட்டார்
வளமான மறைப்புமைப்பேர் லாருஞ்சொல்லார்
காட்டியே உன்முகத்தைக் காணவென்றால்
கனமான மையைத்தான் கலைத்துப்போடு
நாட்டியே மையிருந்தால் சித்தர்காண்பார்
நலமான நூல்களைத்தான் வாங்கிப்பாரே. (181)

பாரப்பா குகைக்குளளே அநேகநூல்கள்
பரிவாக வைத்திருப்பார் வாங்கிப்பாரு
ஆரப்பா நூல்களைத்தான் வாங்கிப்பார்த்தால்
அப்பனே அநேகவிதந் தெரியும்பாரு
வாரப்பா தோய்ந்தாக்கால் சித்தனென்றேபேரு
வளமாக என்னூலை வாங்கிப்பாரு
காரப்பா என்னூல்கற்ப நூறில்சொன்னேன்
கனமான பூசைசெய்து மூன்றும்பாரே. (182)

பாரென்ற தீட்சையது நூறும்பாரு
பரிவான காவியந்தா னூறும்பாரு
ஆறென்ற என்னூல்நால் சாஸ்திரஞ் சொன்னேன்
அப்பனே திறந்துவிட்டே னென்றுசொன்னார்
வாரென்ற சாஸ்திரத்தை வாங்கிக்கொண்டு
வளமான குகைதனிலே பதனஞ்செய்தார்
காரென்ற தர்க்கம தநேகஞ்செய்தேன்
கனமான நூல்களைக் கொடுக்கேனென்றாரே. (183)

கொடுக்கவே மாற்றமைப் போட்டுக்கொண்டு
குருவான நூல்களைத்தா னெடுத்துப்பாரு
வடுக்கவே சகலகலை காவியத்தில் தோன்றும்
வளமான மறைப்புமை யிருந்துதானால்
நடுக்கவே மறைத்தசித்த னென்றபேரு
நலமான சித்தரோடே கூடிவாழ்நீ
அடுக்கவே சித்தரோ டடுக்கவேணும்
அன்பான மறைப்புச் செய்துவாழே. (184)

---

* லாடம்-நெற்றி.

வாழவே நால்யுகத்தைக் காணவேணும்
வளமாக அதிசயத்தை யறியவேணும்
ஆழவே யிறந்திறந்து பிறந்தாலென்ன
அப்பனே வாசியுட வண்மைகாணு
காழவே நால்யுகத்தைக் கண்டேனையா
கருவாகப் பரத்துக்கீ டாகிப்போனேன்
நாழவே நந்திசிவன் பாதஞ்சேர
நலமாக நால்யுகந்தான் சென்றுசேரே. (185)

இரசகுளிகை.

சேரப்பா மறைப்புமைக்கீ டொன்றுமில்லை
செயமான குளிகையொன்று வேணும்பாரு
வாரப்பா ரசகுளிகை சொல்லக்கேளு
வளமான லிங்கரசம் வாலைவாங்கு
ஆரப்பா மேனியென்றால் மேனியல்ல
அப்பனே மேனிசுண்ணம் விந்திற்போடு
நாரப்பா விந்துதான் தெளிந்துப்போச்சு
நலமாக விந்தைஅயக் கிண்ணியினில்வாரே. (186)

வார்த்துமே ரசங்கூட பலந்தான்வாரு
வளமாக அடுப்பேற்றித் தீபம்போலெரிநீ
ஆர்த்துமே ரசமதுதான் வெள்ளிப்போல் கட்டும்
அப்பனே கட்டியது உருகும்போது
மார்த்துமே ஐங்காயங் கழஞ்சுபோடு
மகத்தான சவர்க்கார மெழுகுகொண்டு
நார்த்துமே குகைசெய்து குகைக்குள்வைத்து
நலமாக அயஊசிக் கொண்டுகுத்தே. (187)

குத்தியே மேலுமெழுகால் சில்லுப்போட்டுக்
குறிப்பாகச் செம்மண்ணு பூமிக்கேகி
வத்தியே புதைத்திடுவாய் அஷ்டநாள்தான்
வளமாகக் கட்டியது ரசமணிதானாகும்
மத்தியே பூசைபண்ணு வாலைப்பூசை
மகத்தான ரிஷிகளுக்குத் தியானபூசை
சத்தியே மனோமணியே யென்றுசொல்லி
சகஸ்திரமாய்த் தேவிக்குப் பானம்பண்ணே. (188)

பண்ணயிலே மணியெடுத்து வானம்பார்த்து
பரிவாக எனைக்கொடுபோய் விடுதாயென்று
அண்ணயிலே வாயிற்போட்டு மூடிக்கொண்டு
அப்பனே ஊமையனை தியானம்பண்ணு
வண்ணயிலே கயிலாசங் கொடுமுடிகளெல்லாம்
வளமாகக் கொண்டுபோம் பாருபாரு
கண்ணயிலே நீயிருந்தயிடம் வருகவேண்டி
நலமாக நினைக்கக்ஷணம் வருகும்பாரே. (189)

பார்க்கவே ரசகுளிகை யிருந்துதானல்
பரிவான வாசியது சுணங்கனுகும்
ஆர்க்கவே பாலிலே போட்டும்பாரு
அப்பாசு றசுறென்று பொங்கி வழிந்துப்போகும்
வார்க்கவே வஸ்துவிலே போட்டுப்பாரு
வளமான வஸ்துவெல்லாங் குடித்துப்போடும்
நார்க்கவே நாதநீரில் போட்டாயானல்
நலமாக நாதநீரைப் பறக்கும்பாரே. (190)

பாருநீ தவர்க்கார மெழுகுகொண்டு
பரிவாக மணிமீதிற் பொதிந்துக்கொண்டு
ஆருநீ வெள்ளெருக்கன் நார்தான்கொண்டு
அப்பனே கயிறுகத் திறித்துக்கொண்டு
வாருநீ கயிற்றிலே கோத்துக்கொண்டு
வளமாக இருபுறமும் நீலக்கல் மணிதான் கோரு
மாருநீ யிருபுறமும் இருமுடிதான்போடு
மகத்தான கழுத்திலே கட்டிக்கொள்ளே. (191)

கொள்ளவே யுந்தனுக்குப் பேர்தானப்பா
குருவான குளிகைசித்த னென்றபேரு
அள்ளவே மறைத்தசித்த னென்றபேரு
அப்பனே மாருட்ட சித்தனென்று
மள்ளவே அதிசயற் குருதானென்றும்
மகத்தான ரிஷியென்றுஞ் சொல்வார்பாரு
நள்ளவே யோகியென்றும் நாதனென்றும்
நலமான சிவயோகி யென்பார்பாரே. (192)

என்னவே யுலகத்தி லதிசயங்கள்காட்டும்
என்மகனே குளிகையொன்று லெடுத்தசித்தன்
வன்னவே யுன்தேகம் தங்கம்போலாம்
வளமான வாதசித்த னென்றும்பேரு
கன்னவே கருவிகட்குப் பலந்தானுகும்
கனமான ரசமணியைக் கழுத்திற்கட்ட
நண்ணதே சிவனுமையுங் காணலாச்சு
நலமான அண்டமூர்தங் கொள்ளுவாயே. (193)

சிந்தூரம்.

கொன்னென்ற சிந்தூரஞ் சொல்லக்கேளு
குணமாண லிங்கத்தின் வாலேவாங்கி
வின்னென்ற கல்வத்தில் வார்த்துக்கொண்டு
வேதாந்த முத்துநீர் விட்டுஆட்டு
கள்ளென்ற ஒருஜாமம் ஆட்டினுக்கால்
கனமான சூதமது மடிந்துப்போச்சு
நள்ளென்ற கந்தகமோ பலந்தான்ரண்டு
நலமான கல்வத்திற் போட்டுஆட்டே. (194)

ஆட்டியே செங்கையான் சாற்றில்ஜாமம்
அப்பனே சுத்தசலம் ஜாமம்ரண்டு
காட்டியே யரைத்துவில்லே தட்டிக்கொண்டு
கனமான வில்லேதனே ரவியுலர்த்தி
வாட்டியே அண்டவிந்தால் சீலேசெய்து
வளமான புளியதனுல் குகைதான்பண்ணி
நாட்டியே வில்லேவைத்துக் குகைதான்மூடி
நலமான மண்சீலே யேழுஞ்செய்யே. (195)

செய்யவே ரவியுலர்த்திப் புடந்தான்போடு
ஜெயமான சிந்தூர மருணன்போலாம்
வையவே செந்தூர மெடுத்துக்கொண்டு
வளமாகக் குப்பிதனில் பதனம்பண்ணு
ஙையவே வாலேக்குப் பூசைபண்ணு
நலமான மண்டலந்தான் தேனிற்கொள்ளு
ஐயவே நரைதிரைகள் மாண்டுபோகும்
அப்பனே மேகத்தா லெடுத்ததெல்லாம்போமே. (196)

போமடா நாலாயிரத்து நானூறும்போம்
  புகழான சரீரமது சட்டைத்தள்ளும்
வாமடா காயத்துக் காதிகற்பம்
  வளமான கற்பமது கொள்ளுகொள்ளு
நாமடா ரசகற்பஞ் சொன்னேன்பாரு
  நலமான மாரணத்தின் முப்பூக்கேளு
சாமடா சீவசெந்து செடிகட்பூடு
  செயமான அதரணவேத முப்பூதானே. (197)

மாரணமுப்பூ.

முப்பான நரியண்டம் ரண்டுவாங்கு
  முடிவான கழுதையண்டம் ரண்டுவாங்கு
அப்பனே கருநாயின் அண்டம்வாங்கு
  ஆனதொரு பாலனுட அண்டம்வாங்கு
சப்பான கரும்பூனை அண்டம்வாங்கு
  சமர்த்தான இவையைந்துங் கல்லுரலிலிட்டு
மப்பான சுத்தஜலம் வார்த்துக்கொண்டு
  மகத்தான * எழுக்காம்பால் சாடுசாடே. (198)

ஜாடயிலே புளிபோலே யாகுமப்பா
  சமர்த்தான புளியதனை யெடுத்துக்கொண்டு
வாடயிலே பூநீறு கொண்டுவந்து
  வளமாகப் பாண்டத்தி லிட்டுக்கொண்டு
நாடயிலே சுத்தசலம் வார்த்துக்கொண்டு
  நலமாகக் கலக்கியதைத் தெளிவைவாங்கி
காடயிலே அடிவண்டல் ஊற்றிப்போடு
  கனதெளிவி லிப்புளியைக் கலக்கிடாயே. (199)

கலக்கியே அடுப்பேற்றித் தீயைமூட்டு
  கனமான எண்ணெயுட னீர்கட்சுண்டுண்டும்
வலக்கியே யிறக்கிப்பார் குழம்புபோலாம்
  வளமான குழம்பதனைப் பீங்கானிலூற்றி
மலக்கியே முன்பூமிக் கேகிக்கொண்டு
  மகத்தான வயிரவரைத் தியானமோது
அலக்கிலே யெட்டுநாளைக்குள் மைந்தா
  ஆனதொரு பூபூத்துப் பூநீ ருருகுமென்றே. (200)

* எழுக்காம்பு எஃகுஉலக்கை.

மென்றந்த பூநீற்றைக் குப்பிதன்னில்
மேலாக வழித்தெடுத்துப் பதனம்பண்ணு
அன்றந்த அடியில்நின்ற கசடெலாந்தான்
அப்பனே வைத்தியத்திற் காகும்வைநீ
வன்றந்த முட்பூவைப் பூசைபண்ணு
வளமான முப்பூவடா எட்டெட்டுமோடும்
கன்றந்த நாடிஜன்ற முப்பூவென்றங்
கனமான வஸ்துவென்று மிதற்குப்பேரே. (201)

பேரானமுட் பூவடா ஆதிவித்தை
பிறிவான அறபத்து நாலுமாடும்
ஆரான ஐம்பூத மிதிலொடுக்கம்
அப்பனே தொண்ணூற்றாறு மிதிலடக்கம்
வாரான வாதமொடு பித்தசேஷ்மம்
வகையாக இதிலொடுக்கம் வகுத்துப்பாரு
காரான பிரமனொடு விட்ணுருத்திரன்
கனமயேசன் சதாசிவனு மொடுக்கந்தானே. (202)

தானான முப்பூவை யாருஞ்சொல்லார்
தனதான முப்பூவின் பெருமைமெத்த
வேனான வேரென்று மிதற்குப்பேரு
வேதாந்த முப்பூவென் றிதற்குப்பேரு
கானான கருவென்றுங் குருதானென்றுங்
கருத்தான சிவமென்றுஞ் சத்தியென்றும்
மானான மதுவென்றும் வஸ்துவென்றும்
மகத்தான நாதமென்றும் விந்துவென்றே. (203)

அஞ்சன் மை.

வென்றென்ற மாரணத்தின் முப்பூச்சொன்னேன்
வேதாந்த அஞ்சானத்தின் மைதான்கேளு
அன்றென்ற தேவாங்குக் கண்ணும்வாங்கு
அப்பனே கருங்கழுதைக் கண்ணும்வாங்கு
நன்றென்ற கரும்பூனைக் கண்ணும்வாங்கு
நலமான கழுதையுட பித்துங்கூட்டு
கன்றென்ற குரங்கினுட கண்ணுங்கூட்டு
கருகன்னி யுடவிலக்குச் சீலையென்றே. (204)

சீலான பாலனஞ்சுக் கொடியைவாங்கி
சிறப்பாக இவையெல்லாம் உலர்த்திக்கொண்டு
ஆலான சரக்கையெல்லாம் உலர்த்திக்கொண்டு
அப்பனே கல்வத்தில் தூளாய்ப்பண்ணு
வாலான சீலைதனில் திறிதிறித்து
வளமான கழுதையுட கபாலம்வாங்கு
மாலான காரெள்ளின் எண்ணெய்வாங்கி
மகத்தான அகல்தனிலே வார்த்துக்கொள்ளே. (205)

வார்த்தப்பா திறியதனை விளக்கிலேற்றி
வளமான தீபமது ஏற்றிக்கொண்டு
காற்றப்பா போகாமல் கபாலமூடி
கடிதான எரியிடவேமைதான்பற்றும்
மார்த்தப்பா வழித்தெடுத்துச் சொல்லக்கேளு
மகத்தான முப்பூவும் புனுகும்பூரம்
சார்த்தப்பா கஸ்தூரி யிவைநாலுந்தான்
சமர்த்தாக மத்தித்துச் சிமிழில்வையே. (206)

வையப்பா அஞ்சன தேவிக்குத்தான்
வளமாகப் பூசித்துப் பதனம்பண்ணு
ஐயப்பா இச்சிமிழைத் திறந்துகொண்டு
அப்பனே வெற்றிலையில் தடவிக்கொண்டு
கையப்பா கையில்வைத்துப் பார்த்தாயானால்
கனமான திரிலோகங் காணுவாய்நீ
மையப்பா புதைகளைத்தா னெடுக்கவேண்டி
மகத்தாம்பூ ணைக்கன்னன் கையிற்போடே. (207)

போட்டப்பா பார்த்தாக்கால் பாதாளந்தோன்றும்
புகழான பொருளெல்லாங் கண்ணிற்காணும்
வாட்டப்பா அஞ்சனமைப் போலேயுண்டோ
வளமான குபேரனென்ற பேருமாச்சு
நாட்டப்பா இதுவொன்று மிருந்தால்போதும்
நலமான வாதமது சகந்தானுச்சு
காட்டப்பா அனுமனுடன் வீரபத்ரன்
கனபூத பிரேதமெல்லாந் தோன்றும்பாரே. (208)

பார்ப்பா பொருள்காக்கும் காளிஜயன்
பரிவாக எதிர்த்துவந்தால் சொல்லக்கேளு
காரப்பா விளக்கேற்றுந் திறிதான்சொன்னேன்
கருவாக எடுத்துநீ யேற்றிக்கொள்ளு
ஏரப்பா விளக்கேற்ற ஓடிப்போகும்
என்மகனே எனதுகலைக் கியானம்பாரு
ஆரப்பா அறிவார்கள் கலைக்கியானசித்து
அப்பனே கலைக்கியானம் ஆர்காண்பாரே. (209)

காணப்பா கலைக்கியானம் பார்த்தபேர்க்குக்
கனமான சித்தனென்ன அவர்க்கீடுண்டோ
வாணப்பா நூலிருக்கு மிடத்திற்கேகு
வளமான பணிவிடைதான் செய்துவாநீ
ஆணப்பா அவர்மனது கரைந்ததானால்
அப்பனே நூலீய்வார் பாகஞ்சொல்வார்
மாணப்பா மடையருக்கு ஈயமாட்டார்
மகத்தான சிவயோகிக் கீய்வார்பாரே. (210)

பாரடா நூலீய்ந்தோர் மனநோகச்செய்தால்
பரிவான வல்வினைகள் வந்துசேரும்
வாரடா பொருளீய்ந்து நூலைவாங்கு
வளமான பொருளுக்கு ஈயாவிட்டால்
காரடா பணிவிடைகள் செய்துவாங்கு
கனமாக அவர்கையால் கொடுக்கவாங்கு
நாரடா கைப்பதராய்த் திருடிக்கொண்டால்
நலமான சாபம்வந் திடிக்கும்பாரே. (211)

வல்லாரைக்கற்பம்.

பாரென்ற வல்லாரைக் கற்பங்கேளு
பரிவான விந்துவடா நாதவிந்து
ஆரென்ற நாதமடா சத்திச்சத்தி
அப்பனே விந்துவடா சிவமேயாகிக்
காரென்ற அகாரமடா விந்துவாச்சு
கனமான நாதமடா உகாரமாச்சு
நாரென்ற சத்திசிவங் கூடியப்பா
நலமான சுக்கிலசோ ணிதமுமாச்சே. (212)

ஆச்சென்ற மூலமடா ஆருதாரம்
அப்பனே மணிபூர வீட்டிலப்பா
வாச்சென்ற வாசியது ஒடுங்கும்வீடு
வளமான சத்திசிவ மொடுங்கும்வீடு
காச்சென்ற அப்புவதுகுடியிருக்கும்
கனமான விட்ணுஅவர் கொலுவிருப்பார்
நாச்சென்ற நந்தியவர் வாசஞ்செய்வார்
நலமான நந்தியடா மூளைவாங்கே. (213)

வாங்கென்ற மாதமது பத்தாந்திங்கள்
வளமான மூளையடா நந்திநந்தி
ஆங்கென்ற பூரமதை வாங்கிக்கொண்டு
அப்பனே சிவசுண்ணங் கழஞ்சுகூட்டு
மாங்கென்ற பூரமடா விந்துவிந்து
மகத்தான விந்துவடா நீராய்ப்போகும்
சாங்கென்ற பூரமது நாற்பதுநாட்கொள்ளு
சமர்த்தான சட்டைதள்ளி யுடல்பொன்னுமே. (214)

பொன்னான தேகமதை வைத்துக்கொண்டு
புகழான கற்பவகை யின்னங்கேளு
அன்னான ஆதியடா கூந்தம்அந்தம்
அப்பனே அண்டமடா சோதிசோதி
விண்ணான சோதியடா வீரம்வீரம்
விளங்குகின்ற சேரதியடா வீரகற்பம்
கன்னான கோரையடா வீரம்வாங்கிக்
கனமான பூநீரில் சுத்திபண்ணே. (215)

பண்ணடா பாண்டத்தில் குழித்தயிலம்வாங்கு
பரிவான தயிலத்தில் வழலைச்சுண்ணம்போடு
கண்ணடா வயிரவர்க்குப் பூசைபண்ணு
கனமான வீரகற்பமண் டலமேகொள்ளு
வண்ணடா வாசிக்கு உயிர்தானுகும்
வளமான சட்டையது எழுந்தள்ளும்
நண்ணடாளெட்டான மாதம்வாங்கு
நலமான மற்றென்றி லாகாதுதுபாரே. (216)

பாரடா என்மகனே சொல்வேன்கேளு
பகாரிய சோதியடா சோதிகற்பம்
ஆரடா சொல்வார்கள் சோதிக்கற்பம்
அப்பனே சொல்லவில்லை சொல்லக்கேளு
வாரடா வன்னியடா தேயுதேயு
வளமான தேயுவடா செம்மைசெம்மை
காரடா செம்மையென்ன நீலிப்பூண்டு
கனமான பூண்டப்பா ஆர்காண்பாரே. (217)

காணடா சொல்லுகிறேன் கேளுகேளு
கருத்தான நாதமடா கமலத்துண்டு
வாணடா வல்லியென்றும் மௌனகற்பம்
வளமான கற்பமடா நாதகற்பம்
தோணடா சோதியது கமலத்துண்டு
சொற்பெரிய கமலமடா உந்திக்கற்பம்
ஆணடா ஆறுந்திங்கள் வகுத்துப்பாரு
அரனெடுத்து புசித்திட்டக் கற்பந்தானே. (218)

தானன செம்மையடா சிவப்புமெத்த
தாரணியி லநேகமுண் டறிந்துக்கொண்டால்
வானன வர்சியடா தேகம்பொன்னும்
வளமான தேகத்திற் கழிவோ இல்லை
தேனன தேகமது வஜ்ரதேகம்
திவட்டாத போதமடா சோதிகற்பம்
ஆனன அடிநாவி லமுர்தமூறும்
அப்பனே மௌனமென்ற அமுர்தங்கொள்ளே. (219)

கொள்ளென்ற அமுர்தமது மௌனவாழ்வு
குணமான அமுர்தமடா போதைபோதை
விள்ளென்ற பொருளெல்லாம் விள்ளும்விள்ளும்
வேதாந்த ஞானமெல்லாம் மனதிற்காணும்
அள்ளென்ற அறுமுகமுங் கண்ணிற்காணும்
அப்பனே பன்னிரண் டஸ்தந்தோணும்
கள்ளென்ற கருவுதான் அறிவிற்காணும்
கனமான கெவுனசித்திக் குளிகைசித்தே. (220)

சித்தாக பிறப்பதற்கு ராசிவேணும்
சிவபதவி கிடைக்கவென்றால் தர்மம்வேணும்
மத்தாக அவருக்கு யோகஞ்சித்தி
வளமான சிவயோக ஞானசித்தி
நத்தாத வொருவருட பொருளுக்குத்தான்
நலமான ஸ்ரீகளையும் நத்தவேண்டாம்
வித்தார மானதொரு விளையாட்டெல்லாம்
வேதாந்திக் காகாது விரும்பினேமே. (221)

மதியமுர்தகற்பம்.

விரும்பினே மதியமுர்த கற்பங்கேளு
வேதாந்த கற்பமடா சவர்க்காரந்தான்
அரும்பினேம் காரமுடன் சாரமாகும்
அப்பனே விந்துவுட நாதமாகும்
நரும்பினேம் அண்டவிந்து மதியமுர்தமாகும்
நாதாந்த விந்துவடா செந்நீரப்பா
கரும்பினேம் கரும்புரசங் கொண்டுவிட்டால்
கனமான யாக்கையது வலுத்துப்போமே. (222)

போமப்பா யாக்கையதற் கழிவோயில்லை
பொருளான கற்பமடா கொள்ளுகொள்ளு
வாமப்பா மதியமுர்தங் கொண்டுவிட்டால்
வாரிதியா மஞ்சுவய தாகுமப்பா
நாமப்பா வயதுசொல்ல முடியாதப்பா
நமனேது கொடியண்டங் கட்டலாம்பார்
காமப்பால் கானற்பால் ரண்டுங்கொள்ளக்
கனமான சூரியன்போல் தேகமாச்சே. (223)

அமுரிகற்பம்.

ஆச்சப்பா அமுரிகற்பஞ் சொல்லக்கேளு
அப்பனே சுத்தசலம் வாங்கிக்கொண்டு
பேச்சப்பா பேசாமல் அண்டச்சுண்ணம்
போடுபோன அமுரியடா மண்டலமேகொள்ளு
வாச்சப்பா கற்பமது கொண்டாயானல்
வளமான வாசிக்கு முப்பீதாகும்
நீச்சப்பா வெகுநீச்சு அமுரிநீச்சு
நிசமான அமுரியடா பனிநீராமே. (224)

ஆமப்பா நிகண்டிதுதான் பதனம்பண்ணு
 அப்பனே யிந்நூல்போல் சொல்லாதையா
வாமப்பா சித்தர்க ளநேகஞ்சித்தர்
 வளமான நூற்கெல்லாம் குருவாம் இந்நூல்
காமப்பா கருக்களெல்லாந் திறந்துசொன்னேன்
 கனமான கருக்கிடைநிகண் டிதுதானப்பா
நாமப்பா இந்நூல்தான் சொல்லிப்போட்டேன்
 நலமான நூலிதுதான் அடக்கம்பண்ணே. (225)

பண்ணுவது இந்நூலைப் பதனம்பண்ணு
 பங்கயத்தி னமுர்தத்தைப் பண்பாய்க்கொள்ளு
அண்ணுவது வாசிநீ பழக்கம்பண்ணு
 அப்பனே யில்லாட்டால் மாண்டேபோவாய்
மண்ணுவது மாளாம லிருக்கச்சொன்னேன்
 மகத்தான சித்தனடா வாழ்வீர்வாழ்வீர்
கண்ணுவது கண்ணோட்டம் பாருபாரு
 கனமான அமுர்தத்தைக் கொள்ளுகொள்ளே. (226)

வசியதைலம்.

கொள்ளவே வசியத்தின் தயிலங்கேளு
 குருவான ஐந்துருவாம் பிண்டம்பிண்டம்
விள்ளவே சற்குருதான் ஐந்தாந்திங்கள்
 வேதாந்த பிண்டமடா ஐங்கோலபிண்டம்
கள்ளமே யில்லையடா பிண்டம்வாங்கிக்
 கனமான பிண்டத்தை யுலர்த்திக்கொண்டு
மள்ளவே கல்லுரலி லிட்டுக்கொண்டு
 மகத்தான சுத்தசலம்வார்த் திடித்திடர்யே. (227)

இடிக்கவே யெழுவுலக்கை யதனுற்சாடு
 இதமான பிண்டமடா மெழுகாய்ப்போகும்
பிடிக்கவே பாண்டத்திற்போட்டுக் கொண்டு
 பிரபல்லிய மானதொரு குழிதான் தோண்டி
முடிக்கவே கீழையொரு குடுவைவைத்து
 முதலான பாண்ட.த்தில் * தமருபோட்டு
அடிக்கவே பாண்டத்தை யதன்மேல்வைத்து
 அப்பனே மண்சீலை யேழுஞ்செய்யே. (228)

* தமர்-துவாரம்,

செய்யப்பா பாதிமட்டும் மண்ணுபோடு
செயமான நூறெருவில் புடந்தான்போடு
ஐயமே யில்லாத தயிலம்வீழும்
அப்பனே தயிலத்தைப் பூசித்துவைநீ
கையவே வயிரவர்க்குப் பூசைபண்ணி
கனமான தயிலமதைப் பரணிவைத்து
நையவே நகாரத்தை யுச்சரித்து
நலமான விஷ்ணுவைநீ பூசைபண்ணே. (229)

பண்ணப்பா தயிலத்தை வசியத்துக்கு
பண்பாக வசிபமையை யெடுத்துஆடு
அண்ணப்பா தயிலமது வசியத்துக்கு
அப்பனே குருவிதுதான் ஆடுஆடு
வண்ணப்பா தயிலம்விட்டால் வசியமேது
வளமான தயிலஞ்சற் குருதான்பாரு
கண்ணப்பா ஐங்கோல மிதுதானப்பா
கனமான என்னிகண்டில் திறந்திட்டேனே. (230)

வசியவிபூதி.

திறக்கமில்லா வசியத்தின் விபூதிசொல்வேன்
திறமான விபூதியடா சாம்பல்
அறக்கமில்லா சாம்பலப்பா மயேசன்சாம்பல்
அப்பனே யிதுவிட்டால் வசியமாமோ
வறக்கமில்லா முறைசெய்தால் வசியமாமோ
வளமான முறைகண்டால் சித்தன்சித்தன்
நறக்கமில்லா சகஸ்திரமாஞ் சீவன்செத்தால்
நலமான தலைப்பிண்டம் வேணும்பாரே. (231)

பாரப்பா செத்தவுடன் மயானம்போவார்
பரமான காடென்றும் புடந்தான்செய்வார்
ஆரப்பா காடாற்று முன்னேநீபோய்
அப்பனே சாம்பலுடன் எலும்புவாங்கு
நாரப்பா கலவத்தி லிட்டுக்கொண்டு
நலமான சிறுநீரின் நாமஞ்சொல்வோம்
வாரப்பா சுத்தசலம் பெண்நீரென்றும்
வளமான அமுரியென்றும் ஆண்நீரென்றே (232)

நீரான நீரிதற்கு எதிர்நீருண்டோ
  நிசமான நீரிதற்கு அனந்தம் பேரு
வாரான சுத்தசலம் விட்டுஆட்டு
  வளமாக வழித்தெடுத்து பில்லைசெய்து
நாரான * மதிதனிலேயுலர்த்திக்கொண்டு
  நலமான பத்தெருவில் புடந்தான்போடு
ஆரான வெண்ணீறாய்நீறிப்போகும்
  அப்பனே திருநீற்றைப் பதனம்பண்ணே (233)

பண்ணப்பா ருத்திரர்க்குப் பூசைபண்ணு
  பண்பான வாமத்தின் பூசைப்பண்ணு
கண்ணப்பா விபூதிதன்னை மேருக்கேற்று
  கனமான விபூதியடா பூசுபூசு
வண்ணப்பா வழிதனிலே போனாயானால்
  வளமான உலகமெல்லாம் அடியில்வீழ்வார்
நண்ணப்பா மனுஷரண்டை போனாயானால்
  நலமான ராசர்சர ணஞ்செய்வாரே. (234)

செய்யப்பா உன்தேகம் வச்சிரம்போல்மின்னும்
  செயமான மனிதரப்பா மோகமாவார்
நையப்பா ஸ்ரீகளுன்னைக் கண்டாரானால்
  நலமான மாயவெறி கொண்டெழும்பி
ஐயப்பா அரைநொடியில் மோகங்கொண்டு
  அப்பனே யுன்னடியில் வருந்துவார்கள்
கையப்பா தாயெனவே பூசித்துக்கொண்டு
  கனமான மண்ணையள்ளி தம்பித்துப்போடே. (235)

போடயிலே வெறிதெளிந்து சரணஞ்செய்வார்
  புகழான மாமுனியோ ரிஷியோவென்பார்
ஆடையிலே சன்னாசி சித்தனென்று
  அப்புறத்தில் போயிடுவாள் மாயாகன்னி
வாடயிலே மயக்கத்தால் வந்துவிட்டு
  வளமான விதியினால் வந்தோமென்பார்
காடயிலே ஊருக்கு மேற்கேகுந்து
  கனமான விபூதிதனை o லாடம்பூசே. (236)

* மதி-சந்திரன்.
o லாடம்-நெற்றி.

பூசையிலே மாதன்னைக் கண்டாரானால்
புகழ்பெரிய நாதனரிவர்தா னென்பார்
ஆசையிலே யதிமோகங் கொண்டு உன்மேல்
அப்பனே நீகேட்ட தெல்லாமீவார்
வாசையிலே மனிதருன்னைச் சுற்றிக்கொள்வார்
வளமான முன்சொன்ன மறைப்புமைபோடு
காசையிலே கள்ளரடா அநேகம்பேர்கள்
கனமான அவரிடத்தில் முகங்காட்டாதே. (237)

காட்டாத மறைப்புமை போட்டுக்கொண்டு
கனமான நீயிருக்கு மிடத்திற்கேகு
மாட்டாதே மறைத்தசித்த னிவர்தானென்பார்
மகத்தான சித்தனடா ஐயோவென்பார்
வாட்டாதே போய்விட்டார் ரிஷிதானென்பார்
வளமான இருஷியடா மகத்தாஞ்சித்தன்
நாட்டாதே யொன்றுந்தான் சொல்லவில்லை
நலமான என்னுடைய விதியென்பாரே. (238)

விதியான போதமயங் கொள்ளவேணும்
வேதாந்த பூரணத்தை யறியவேணும்
சதியான சதிபுருஷன் நிலைக்கவேணும்
சமர்த்தான ஆணவத்தை யொழிக்கவேணும்
மதியான மதியமுர்தங் கொள்ளவேணும்
மகத்தான வாசியைத்தான் புசிக்கவேணும்
கதியான சிதம்பரத்தைக் காணவேணும்
கதிகெட்ட வண்டர்களே அலையாதேகேள். (239)

அலையாமல் சத்தியமே நிலைக்கவேணும்
ஆதார முள்ளபதி நோக்கம்வேணும்
கலையான பன்னிரண்டு பழக்கம்வேணும்
கனமான வாசியது ஒடுக்கம்வேணும்
மலையாமல் சொல்லிவிட்டேன் இந்நிகண்டில்
மகத்தான அறிவுள்ளோர் தேர்வாரையா
வலையாமல் கைமுறைசெய் பாகஞ்சொன்னேன்
வளமான நந்தீச ரருளினாலே. (240)

அருவான இந்நூலை வெளிவிடாதே
அப்பனே நிகண்டிது தான் அடக்கம்பண்ணு
கருவான எந்நூலைப் பழித்தபேர்க்கு
கனமாம அந்தர இடிதான்வீழும்
மருவான என்னூல்போல் நூலேசொல்வார்
மகத்தான சித்தர்களோ சொல்வார்பாரு
வருமான என்னூலைப் பார்த்தாரானல்
வலுவான தவயோகி யென்றபேரே. (241)

பேரான நூல்பாடிப் போட்டதென்ன
பிரபல்லிய மானதொரு மனிசர்க்காக
கார்ரான மாட்டெல்லாம் பொருள்தானையா
கருத்தான பாடலப்பா எழுதுதற்கு
பாரான பனையோலை கிடையாதப்பா
பகரரிய பொருளிருந்து மோடனுவார்
வாரான வழிதுறையுந் தெரியச்சொன்னேன்
வளமான நூலினுட வளப்பஞ்சொன்னேன். (242)

சொன்னனடா மனிதரவர் பிழைக்கச்சொன்னேன்
சொற்பெரிய காரத்துக் குறுதிசொன்னேன்
வன்னனடா வழிதுரையுங் காணச்சொன்னேன்
வளமான கருவுடனே குருவுஞ்சொன்னேன்
மன்னனடா மதியமுர்தங் கொள்ளச்சொன்னேன்
மகத்தான வாசியுட வளமைசொன்னேன்
அன்னனடா ஆதியந்த மறியச்சொன்னேன்
அப்பனே அடிமுடியும் நடுச்சொன்னேன். (243)

நடுவான முப்போடு மெழுகுசொன்னேன்
நலமான ஊமையென்ற எழுத்துச்சொன்னேன்
வடுவான மாணிக்கப் புளியுஞ்சொன்னேன்
வளமான சுண்ணங்கள் ஜெயநீர்சொன்னேன்
முடுவான கருதலங்கள் திறந்துசொன்னேன்
முக்யமுள்ள வழலையின்போ நன்றாய்ச்சொன்னேன்
வடுவான சிவசத்தி நன்றாய்ச்சொன்னேன்
மகத்தான வயித்தியத்தின் சூக்ஷஞ்சொன்னேன். (244)

சருவவியாதிக்கும்-காந்தச்சேந்தூரம்.

சொன்னமொழி வயித்தியமொடு வாதஞானம்
சொற்பரிய யோகமுடன் மாந்தரீகஞ்சொன்னேன்
கன்னமொழி கருக்கிடைகள் தெரியச்சொன்னேன்
கனமான ஜாலத்தின் சூக்ஷஞ்சொன்னேன்
வன்னமொழி மனிதற்கு நோய்கண்டாக்கால்
வளமான மருந்தொன்று சொல்லக்கேளு
அன்னமொழி காந்தமது பலந்தான்வாங்கு
அப்பனே அயப்பொடிதான் பலமும்வாங்கே. (245)

வாங்கப்பா இவைஇரண்டுஞ் சுத்திசெய்து
வளமான கல்வத்தி லிட்டுக்கொண்டு
வங்கப்பா கெந்தியது பலந்தான்ரண்டு
நலமான வீரமது பலந்தானென்று
ஆங்கப்பா அரைக்கயிலே பனிசலந்தான்வாரு
அப்பனே யிருஜாமம் ஆட்டிக்கொண்டு
மாங்கப்பா கௌரியுடன் பூரஞ்சூதம்
மகத்தான கறியுப்புக் கூடச்சேரே. (246)

சேரப்பா வகைக்குயரைப் பலமுங்கூட்டு
செம்மையுடன் கல்வத்திற் போட்டுக்கொண்டு
வாரப்பா செங்கைபான் சாற்றாலாட்டு
வளமாக அதன்பிறகு சொல்லக்கேளு
ஆரப்பா அரிவார்கள் முத்துநீரை
யட்பனே யதில்ஜாமம் ஆட்டிக்கொண்டு
நாரப்பா வழித்தெடுத்துப் பில்லைசெய்து
நலமான கோழிபுடம் தன்னைப்போட்டே. (247)

போட்டெடுக்க முருக்கம்பூப் போலேயப்பா
புகழான செந்தூரஞ் காந்திமெத்த
வாட்டெடுக்கப் பாண்டுவுக்குச் சுக்குத்தேனில்
வளமாகக் கொடுத்துவுட பறந்துபோகும்
காட்டெடுக்கத் திரிகடுகு சூரணத்தில்
நலமாகக் கொலத்துவிட க்ஷயமெட்டும்போம்
காட்டெடுக்க மேகமது இருபதுக்கும்
கனமான அநுபான மறிந்துகொள்ளே (248)

கொள்ளப்பா தேனிலே கொண்டாயானால்
கூறுகெட்ட தோஷமெல்லாம் குலைந்துபோகும்
விள்ளப்பா கொடிவலிக் கியாழத்தில்தான்
வேதாந்த செந்தூரம் போட்டுக்கொண்டால்
கள்ளப்பா அறுபத்து நாலும்போகும்
கனமான சுரமுடனே யீளைசன்னி
முள்ளப்பா ஜன்னியதின் மூன்றம்போகும்
முறையான இம்முறைப்போல் சொல்லார்பாரே. (249)

முப்பூவின்செந்தூரம்.

சொல்லவே யின்னமொரு செந்தூரங்கேளு
சொற்பெரிய முப்பூவின் செந்தூரமையா
அல்லவே கல்வத்தில் முப்பூவிட்டு
அப்பனே சங்குநீர் அமுர்தம்வார்த்து
மெல்லவே அரைத்தபின்பு முத்துநீர்வார்த்து
மேலான கல்வத்தில் ஜாமமமாட்டு
கல்லவே வழித்தெடுத்து பில்லைசெய்து
கனமான ஐங்காயக் கவசம்போடே. (250)

போட்டப்பா அதன்மேலே விந்தால்சூலை
புகழ்பெரிய மண்சீலை யதன்மேல்போடு
ஆட்டப்பா முழப்புட.ந்தான் போட்டுத்தீரு
அப்பனே அருணன்போல் காந்திவீசும்
நாட்டப்பா செந்தூரம் நாற்பதுநாட்கொள்ளு
நலமான சட்டைதள்ளி திரேகம்பொன்னும்
காட்டப்பா செந்தூரம் பூரணுதி
கனமான பூரணுதி கொள்ளு கொள்ளே (251)

கொள்ளவே நெல்லிபருப் பளவுகொள்ளு
கூறுன வாசியது மூலத்தேகும்
விள்ளவே யாண்விண்டேன் யார்தான் விண்டார்
வேதாந்த தன்வந்திரி விண்டேனையா
கள்ளமே யில்லாமல் சொன்னேனையா
கருத்துள்ள ராசிவான் தேர்வீர் தேர்வீர்
மெள்ளவே தருமமென்ற கேள்வியுள்ளோன்
மேன்மேலும் வாழ்வீர்கள் மெத்தநன்றே. (252)

நன்றாக இருப்பதற்கு இவ்விதமாய்க்கேளு
நலமில்லா மடையர்களும் செவிடர்தானும்
குன்றாக குருவென்றும் ஆசிரியனென்றுங்
கூறுகெட்ட மடையர்களோ மெத்தவுண்டு
பன்றாகக் காவிகட்டி லங்கோடுகட்டி
பரமான என்பேரன் யோகதண்டுவைப்பார்
வன்றாகக் கர்மமென்ற சண்டாளஞ்செய்வார்
வளமான கர்மிகளாய் மடிவார்பாரே. (253)

பாரடா அவரிச்சை யாலேசெய்த
பாவமடா எத்தேசம் போனுலென்ன
ஆரடா அகஸ்தியருட முத்திரையைப்பெற்றால்
அப்பனே மாற்றனென்ற சித்தன்பேரு
காரடா யவதரித்தால் சித்தனுவாய்
கனமான இச்சைபடி தரித்தோர்கற்மி
வாரடா கற்மியவர் தரித்தாரானுல்
வளமான மதத்தால்கெட் டலைவார்பாரே. (254)

பாரென்ற இல்லறத்தில் யோகஞ்செய்து
பரிவாக பூரணுதி கொண்டுதேர்ந்து
ஆரென்ற யாக்கைகரு கற்பங்கொண்டு
அப்பனே சாரணையின் பழக்கம்பண்ணி
வாரென்ற மறைப்புமை செய்துக்கொண்டு
வளமான சாரணைகொண் டேறிவாரீ
நாரென்ற பிரமன்பணி விடைகள்செய்வான்
நலமான ஆயிசுதான் வளர்ந்துப்போச்சே. (255)

போச்சென்ற வாதத்தா லென்னவாகும்
பொருளான செவிடர்களே யோகம்பாரு
ஆச்சென்ற யோகமதை விட்டீரானுல்
அப்பனே சடலமதற் கழிவேபாச்சு
வாச்சென்ற மாய்கையினுல் வாதம்பார்ப்பார்
மடையருக்கு யோகமது கசப்புமாச்சு
நாச்சென்ற வாதமது மடையருக்கு
நலமாகத் தித்திக்கு மட்டிமாடே. (256)

மாடப்பா புத்திகெட்ட மடையருக்கு
மகத்தான அறிவதுதான் விளக்கமாமோ
ஆடப்பா அவரவர்கள் மதத்தால்தானும்
அப்பனே கெட்டலேவார் மதங்களேறி
காடப்பா புத்தியுள்ளோன் சிவயோகிக்குக்
கனமான கல்விகள்தான் விளக்கமாகும்
நாடப்பா நாடெல்லாஞ் சுற்றினாலும்
நலமான கர்மமது விடாதுபாரே. (257)

பாரப்பா என்மகனே அளவனியேகேளு
பண்பான யோகமடா ஞானப்போக்கு
ஆரப்பா அறிவார்கள் ஞானப்போக்கை
அப்பனே ஞானமடா யோகவாழ்வு
காரப்பா கனகசபை நடனங்கண்டால்
கனமான வாழ்வதுதான் பாருபாரு
நாரப்பா நந்தீசர் கலைக்கியானம்பாரு
நாதாந்த வேதமடா கலைக்கியானம்போக்கே. (258)

போக்கப்பா கலைக்கியானம் நந்தீசர்சொன்னார்
புகழ்பெரிய அதையெடுத்துத் திறந்தேனப்பா
வாக்கப்பா நந்தீசர் வாக்கியமென்று
வளமான சித்தர்கள் பணிந்தார்பாரு
மாக்கப்பா சகலகலை யதிலேதோன்றும்
மகத்தான அறிவுள்ளோர்க் குருநூலப்பா
நாக்கப்பா முன்சொன்ன வாசிசூட்சம்
நலமான சொச்சத்தை சொல்வேன்கேளே. (259)

சத்திபீட நாற்பத்துமுக்கோணங்களு மெழுத்துகளும்.

கேளப்பா பீடமது சத்திபீடம்
கெடியான பீடமது சொல்வேன்கேளு
நாளப்பா நவகோணங் கீறிக்கொண்டு
நலமாக அதிலேஐங் கோணங்கீறி
வளப்பா அதனடுவே முக்கோணங்கீறி
வளமான கோணமடா மகத்தான கோணம்
ஆளப்பா நவகோணத்தின் மேலேகேளு
அப்பனே வட்டமொன்று வளையம்போடே. (260)

போடப்பா நாற்கோணம் நாற்சதுரம்போடு
பொருளான சதுரமடா இருவகையாய்ப்போடு
வாடப்பா வரைப்பிடித்து முக்கோணங்கீறி
வளமாகச் சுற்றிலுந்தான் முக்கோணங்கீறு
நாடப்பா சுற்றிலுந்தான் கீறிக்கொண்டால்
நலமான கோணமடா நாற்பத்துமுக்கோணம்
சாடப்பா சுயமரத்தை நடுவேநாட்டு
சமர்த்தான ஊமையடா நடுவேவையே. (161)

வையப்பா ஊமைதனை முக்கோணத்தில்
வளமான * ஐங்கோணத் தட்சரத்தைக்கேளு
கையப்பா உம்மென்று நடுவேபோட்டு
கனமாகச் சுற்றிலுந்தான் போடக்கேளு
நையப்பா நங்கென்றும் உங்கென்றுமாட்டு
நலமான வங்கென்றும் ரீங்கென்றுமாட்டு
ஐயப்பா சிங்கென்றும் ரங்கென்றுமாட்டு
அப்பனே மங்கென்றும் லங்கென்றுமாட்டே. (262)

மாட்டவே யங்கென்றும் டிங்கென்றுமாட்டு
வளமான ஐங்கோண அட்சரத்தைச் சொன்னேன்
வாட்டவே நவகோணத் தெழுத்தைக்கேளு
வளமான மேல்முடியில் அகாரம்போடு
நாட்டவே யதிலுத்தரம் இகாரம்போடு
நலமான வடக்கினிலே உகாரம்போடு
காட்டவே ஈசானியத்தில் மகாரம்போடு
கனமான கீழ்த்திசையில் ஓங்காரம்போடே. (263)

போடடா சனிமூலை அவ்வும்போடு
புகழான தட்சணத்தில் கிலியும்போடு
நாடடா கன்னியுட மூலையில்தான்
நலமான ஸ்ரீயுமென்று நாட்டிடாய்நீ
வாடடா ஒருகோணம் அப்புறத்தைப்போடு
வளமான பத்தினிலும் அடங்கினர்பார்
காடடா நாற்பத்து முக்கோணத்தில்
கனமான ஐம்பத்தோ ரட்சரத்தைவையே. (264)

---

* ஐங்கொணத்தட்சரம் ஐங்கோணத்துஅட்சரம்.

வையப்பா அதன்மேலே யிருவளையம்போடு
வளமாக நால்மூனை நாலிதழும்போடு
நையப்பா நாலிதழ்க்கும் அட்சரத்தைக்கேளு
நலமான வயிரவனும் வீரபத்திரன்
கையப்பா காளியுடன் இருளனுமு
கணக்காக அவரைவைக்கும் ஸ்தானங்கேளு
மெய்யப்பா மேற்கினிலே வீரபத்திரன்
மேலான வயிரவனைக் கிழக்கேவையே. (265)

வையடா தெற்கினிலே காளிவைநீ
வளமான இருளனைத்தான் வடக்கேவைப்பாய்
கையடா நாலிதழ்க்குநால் தேவதைகட்சொன்னேன்
கனமான நவகோணஞ் சூலம்போடு
நையடா சூலத்தி லொன்பதிதழ்ப்போடு
நலமான நவக்கிரகம் இதழிற்போடு
மெய்யடா ஐங்கோணம் ஐந்துசூலம்போடு
மென்மேலுஞ் சூலத்தில் ரீங்காரம்நாட்டே. (266)

நாட்டவே முக்கோண மூன்றிதழும்போடு
நலமான வஸ்துவடா ஊமைஊமை
காட்டவே ஊமைதனைப் போலுமுண்டோ
கனமான ஊமையடா வாலையப்பா
வாட்டவே வேண்டாங்காண் ஊமைசத்தி
வளமான சத்தியடா நாதசத்தி
மாட்டவே வகைதோன்றச் சொன்னேன்கேளு
மகத்தான பூசைசெய்து யோகஞ்செய்யே. (267)

செய்யடா என்மகனே சொல்லக்கேளு
ஜெயமான சக்கரத்தை முன்னேவைத்து
ஐயடா அபிஷேகம் அஞ்சுஞ்செய்து
அப்பனே புட்பமொடு சந்தனமுசாத்து
கையடா கஸ்தூரி புனுகுபூரம்
கனமான பரிமளஞ் சவ்வாதுசாத்து
மெய்யடா சக்கரத்தின் மேலேயப்பா
மேலான சல்லிமரப் பாவைவையே. (268)

வைத்தடா செம்பட்டு அதைதான்சாத்து
வேதாந்த புட்பமொடு பரிமளமுஞ்சாத்து
ஐத்தடா மதனவல்லிக் கொலுவில்சாத்து
அப்பனே * சமிதைகொண்டு ஓமஞ்செய்து
மெய்த்தடா மதியமுர்தந் தன்னைவைத்து
மென்மேலும் பால்பழங்க ளுபசாரஞ்செய்து
நைத்தடா தூபமொடு தீபங்காட்டி
நாதாந்த சத்தியென்று தோத்திரஞ்செய்யே. (269)

செய்யடா என்மகனே சொல்லக்கேளு
ஜெயமான மூலமடா மூலாதாரம்
ஐயடா ஆதார மேலாதாரம்
அப்பனே மேல்நோக்கிக் கீழ்நோக்கும்வீடு
வெய்யடா வேதாந்த வீடுதானப்பா
வேதாந்த வாசியது ஒடுங்கும்வீடு
கையடா மூலத்தில் நிற்கும்வீடு
கனவீட்டில் வாசியது எழும்பும்பாரே. (270)

பாரடா விந்தாலும் வியாதியாலும்
பகரரிய அன்னமில்லாச் சூட்டினாலும்
நாரடா கன்மத்தா லநேகம்போகும்
நாதாந்த வதையாலும் வினையினாலும்
வாரடா இவைகளினால் ஸ்வாசம்போச்சு
வளமான வீட்டிலடங்கும் விவரங்கேளு
காரடா இம்மென்று இழுத்துக்கும்பி
கனமாக அடக்கயிலே மூலம்புக்கும்பாரே. (271)

பாரப்பா விடுகையிலே உம்மென்று தியானம்
பரிவாக எடுக்கையிலேமுன் விதமாய்க்கும்பி
ஆரப்பா அறிவார்கள் வாசிசூட்சம்
அப்பனே திறந்துவிட்டேன் முன்னேதாண்டா
நேரப்பா ஐங்காயம் முப்பூங்கூடி
நெல்லெடைவா யடக்கவே அமுர்தமூறும்
நாரப்பா பூரணதி யமுர்தங்கொண்டு
நலமாகபூரணத்தைக் கும்பித்துப்பாரே. (272)

* சமிதை-ஓமவிளகு.

பாரெனவே பூரணதி யதனிலப்பா
பண்பான வாசியது மடிந்துபோச்சு
காரெனவே கருவிகள்தான் தொண்ணூற்றாறுங்
கனமாக வுருகியது கற்போலாச்சு
ஆரெனவே யிந்தவிதங் கும்பித்தாக்கால்
அப்பனே நாற்பதுநாள் பழக்கம்பண்ணு
வாரெனவே வாலைமுன்னே குந்திக்கொண்டு
வளமாக கால்கழுத்தில் சிக்கம்போடே. (273)

சிக்கமிட்டு யோகதண்டு இருபுறமும்வைத்து
செயலாக மான்தோலில் குந்துக்குந்து
வக்கமிட்டு ஒருநிலையாய் ஒருதவமாய்நின்றால்
வகாரமுள்ள பதிதோன்றும் பாருபாரு
பக்கமிட்டு நாற்பதுநாள் ஒருமனதாய்குந்து
பகருமிரு நினைவதனை வைக்கவேண்டாம்
தர்க்கமிட்டு உக்கிரவை ராக்கியம்கொண்டு
தருமந்தான் ஒருமனதாய் நில்லுநில்லே. (274)

நிற்கையிலே யொருவேளை போசனங்கொள்
நேரான போசனத்தைத் தள்ளவேண்டாம்
வற்கையிலே கள்ளுடன் சாராயமாகா
வளமான கஞ்சாவு மாகாதுபாரு
கற்கையிலே அமுர்தமது கொள்ளும்போது
கனமான புளியுடனே புகையுமாகா
மற்கையிலே வாசியுட அமுர்தங்கொள்ளு
மகத்தான போதமடா வாசிதானே. (275)

போதமது கொள்ளையிலே காற்றுமாகா
புகழான வாசிகொண்டால் சித்தன்சித்தன்
ஆதமது இல்லாத சடலத்தைத்தான்
அப்பனே நிறுத்துமது அருமைமெத்த
வாதமது செய்தாக்கா லென்னகீர்த்தி
வளமான சடலத்தை நிறுத்தவேணும்
காதமது திரிந்தாலு மென்னகீர்த்தி
கனமாக இல்லறத்தில் யோகஞ்செய்யே. (276)

செய்யயிலே யொருவருஷஞ் செய்தானுகில்
ஜெயமான பிரமனவன் இவர்க்கீடுண்டோ
வையயிலே ஐம்பூத வாசியாலே
வளமாக சுவசத்தி வாசியாலே
கையயிலே ஊமையனும் வாசியாலே
கனமான கருவிகள்தான் தொண்ணூற்ருறும்
நையயிலே கூடுமது வாசியாலே
நலமான வாசியினு லெல்லாமாச்சே. (277)

கருங்கையான்கற்பம்.

ஆச்சென்ற வாசியைநீ மறக்கவேண்டாம்
அப்பனே கருங்கையான் கற்பங்கேளு
வாச்சென்ற பிண்டத்தி லெருகைக்கொட்டி
வளமான கருங்கையான் அதன்மேல்வைத்து
போச்சென்ற சுத்தசலம் வாருவாரு
புகழ்பெரிய செடியாகிப் பச்சைகொள்ளும்
காச்சென்ற கருங்கையான் நாற்பதுநாட்சென்ருல்
கனமான கருங்கையான் விருட்சம்போலாமே. (278)

ஆமென்ற கருங்கையான் நாற்பதுநாட்கொள்ளு
அப்பனே சட்டையது ஏழுந்தள்ளும்
காமென்ற அமுர்தமது கனிந்துபாயும்
கனமான கருங்கையான் மகத்வமெத்த
வாமென்ற வழலைகையான் இதுதானப்பா
வளமான கையானை மண்டலமேகொள்ளு
போமென்ற கையானில் வாசிசித்தி
புகழ்பெரிய ஞானமொடு யோமஞ்சித்தே. (279)

மேனிக்கற்பம்.

சித்தாக இருப்பதற் கின்னங்கேளு
செயலான மேனிக்கற்பஞ் சொல்வேனப்பா
மத்தாக மேனிசெடிக் கொண்டுவந்து
மகத்தான தலைப்பிண்ட எருவும்போட்டு
நத்தாக செடிபுதைத்துச் சொல்லக்கேளு
நாதாந்த சிறுநீரை வார்த்துக்கொண்டு
மெத்தாக அறுபதுநாட் சென்றுதானுல்
மென்மேலும் விருட்சமதாய் செடியாய்ப்போமே. (280)

போகுமடா கைபாக மாகவைநீ
பொருளான நீரைத்தான் பதன்மாய்வாரு
வாகுமடா விருட்சத்தைத் தொண்ணூறுநாட்கொள்ளு
வளமான * யாக்கையடா அழிவோஇல்லை
நாகுமடா முப்பூச்சுண்ணம் போட்டுக்கொள்ளு
நாதாந்த கற்பமடா மேனிக்கற்பம்
ஆகுமடா யாக்கையது வலுத்துப்போச்சு
அப்பனே யாக்கையது எழுபோலாச்சே. (281)

ஆச்சென்ற வாசிக்கு உயிர்தானகும்
அப்பனே வாசியடா மதவானைத்தான்
காச்சென்ற கருவிகளோ சொக்கச்சேர்ந்து
கருவாக நிற்குமடா வாசிவீடு
வாச்சென்ற வழிதுறையும் நன்றாய்ச்சொன்னேன்
வளமான கைபாகம் நன்றாய்ச்சொன்னேன்
நாச்சென்ற நந்தீசர் அருள்தன்னாலே
நன்றாகச் சொல்லிவிட்டேன் நாதந்தானே. (282)

ஐங்கோலஜெயநீர்.

நாதந்தரன் ஐங்கோல ஜெயநீர்கேளு
நலமான பிண்டமடா ஐங்கோலபிண்டம்
வாதந்தான் இதற்கீடோ இதுவிட்டாக்கால்
வளமான வாதமெல்லாம் அழிந்துப்போச்சு
காதந்தா னில்லையடா ஐங்கோலபிண்டம்
கனமான பிண்டமடா கொண்டுவந்து
மாதந்தா னேந்தான மாதமப்பா
மகத்தான அண்டத்தை யுடைத்துக்கொள்ளே. (283)

கொள்ளப்பா வீரமுடன் பூரங்கரியுப்புக்
குணமான வெடியுப்பு அண்டச்சுண்ணம்
அள்ளப்பா இவையெல்லாம் பொடித்துக்கொண்டு
அப்பனே யண்டத்தில் போட்டுக்கொண்டு
விள்ளப்பா மேல்நோக்கி வானம்பார்த்து
விசையாகப் பனிபெய்யுங் காலந்தன்னில்
மள்ளப்பா மதிதனிலே வைத்திட்டாக்கால்
மகத்தான ஜலமாகி நீராய்ப்போமே. (284)

---

* யாக்கை உடல்.

போமப்பா நீர்தன்னைப் பதனம்பண்ணு
புகழான நீரப்பா ஐங்கோலநீர்தான்
வாமப்பா வாதிகளே நாமங்கேளு
வளமான ஐந்தருவாம் ஜெயநீரென்பார்
காமப்பா கும்பிடென்றே யேரிநீரு
கனமான ஏரியுடசத்திநீரு
நாமப்பா கோரையுட ஜெயநீரென்பார்
நலமான ஐந்துவகை யானநீரே. (285)

நீரென்ற வழலைநீர் சவர்க்காரநீர்தான்
நிசமான சங்கினியின் நாதநீரு
வாரென்ற ஐங்கோல சங்கினிதானப்பா
வளமான எட்டாவ சித்தினிதான்பாரு
காரென்ற ஒன்பதுடன் பத்துந்தாண்டா
கனமான பதுமினிதா னென்றபேரு
ஆரென்ற மூன்றுடனே நாலுந்தாண்டா
அஸ்தினி யென்றுநாம் அருளினோமே. (286)

அருளினோம் சித்தினியும் அஸ்தினியும்பாரு
அப்பனே சங்கினியும் பத்மினியுந் தாண்டா
வளுளினோம் சகலவித்தை பிரித்துச்சொன்னேன்
வளமான சித்தர்கள்தான் மறைத்துச்சொன்னார்
நருளினோம் ஈசனவர் தர்மமாவென்றான்
நலமாக அடிவணங்கி தென்டன்செய்தேன்
கருளினார் கருவிகள்தான் காதிற்சொன்னார்
கனமாக யான்கண்டு திறந்திட்டேனே. (287)

திறந்திட்டே னென்றதொரு விவரங்கேளு
திறமான சித்தர்களோ டொக்கச்சேர்ந்தேன்
வறந்திட்டே னென்றவர்தான் குலமென்னவென்றார்
வளமான என்குலந்தான் சிரையனென்றேன்
அறந்திட்டே னென்றவர்தான் தர்க்கஞ்செய்தார்
அப்பனே தத்துவத்திற் கிழித்திட்டேன்பார்
நறத்திட்டே னென்றதோர் ஜாதியொன்று
நலமான சாதியடா ஆண்பெண்ரண்டே. (288)

ரண்டான சாதியடா பலசாதியாச்சு
* ரேசக 0 பூரகமுமது ஒன்றுய்ப்போச்சு
வண்டான என்மனதை சோதித்தார்கள்
வளமான என்னுள்ளங் கண்டாரையா
அண்டான அவர்மனந்தான் பூரித்தார்கள்
அப்பனே தன்வந்திரி பகவானென்றார்
கண்டான வசிஷ்டருட ஆசீர்மம்போனேன்
கனமான வசிஷ்டர் தர்க்கஞ்செய்தாரே. (289)

தர்க்கமிட்ட அவரோடே யுத்தாரஞ்சொன்னேன்
தனதாக அவரெனக் காசீர்வதித்தார்
வர்க்கமிட்ட அறுபத்து நால்பேரண்டை
வயைாக அவரவர்தன் வரங்கள்பெற்றேன்
மர்க்ககட்ட மௌனத்தில் சகஸ்திரமிருந்தேன்
மகத்தான மௌனசிவ யோகம்பெற்றேன்
நர்க்கமிட நந்தீசர் பாதஞ்சேர்ந்தேன்
நலமாகநந் தீசரென்னை வளர்த்தார்பாரே. (290)

நூல்கோர்வை.

பாரப்பா என்னுடைய கோர்வைசாஸ்திரம்
பண்பாகச் சொல்லுகிறேன் கேளுகேளு
ஆரப்பா அறிவார்கள் கலைக்கியானமகிமை
அப்பனே கலைக்கியானந் தண்டகமும்பாரு
நேரப்பா இருநூறும் பாருபாரு
நிகைஷயசூஸ்திர மெழுபத் தொன்றும்பாரு
காரப்பா என்னுடைய முப்பூபாரு
கனமான ஜெயநீர்தான் ஐம்பதுவுங்காணே. (291)

காணப்பா இந்நூலின் மகிமைகாணு
காணுட்டா லிந்நூல் மகிமைமெத்த
வாணப்பா கசடர்களே வாதிமாடே
வளமான இந்நூலைச் சோதித்தேறு
ஆணப்பா இந்நூலார் கொடுக்கப்போறார்
அப்பனே சாஸ்திரத்தைத் தேடிவாங்கு
மாணப்பா மடையருக்கு அகப்படாது
மகத்தான சிவயோகி பார்ப்பார்பாரே. (292)

* ரேசகம்-ஸ்வாசம்வெளியிடுதல்.
0 பூரகம்-மூச்சுஉட்புகுதல்.

பார்க்கவே சகலமுந்தான் தோன்றும்பாரு
பண்பான சிவயோகிக் கிந்நூல்காணும்
ஆர்க்கவே சமாதிச்குள் கற்பங்கொண்டு
அப்பனே யோகநிஷ்டை யஷ்டாங்கஞ்செய்து
நார்க்கவே கெவுனத்தி னேட்டம்பார்த்து
நலமான வாலைப்பெண் ணஷ்டாங்கஞ்செய்து
கார்க்கவே கபாலத்தில் மதியமுர்தம்வாங்கு
கனமான யோககுகை யதனிற்கொள்ளே. (293)

கொள்ளப்பா சமாதிக்குள் தலைவணுகிக்
கொண்டுவிடு சாரணைமே லேறிக்கொண்டு
அள்ளப்பா சித்தரண்டை வந்துசேரு
அப்பனே யோகமுர்தம் பூட்டுவார்கள்
வள்ளப்பா லோகத்தில் நின்றயானல்
வாரிதிபோல் பிரமனவன் கொண்டுபோவான்
கள்ளப்பா கசடரவர் நூல்பார்த்தாலும்
கரையேற மாட்டார்கள் கண்டிலாரே. (294)

வைரவர்தியானம்.

காணடா நூலிருக்கு மிடமறிந்து
கைப்பொருளை யீந்துநீ நூலைவாங்கு
வாணடா வைரவர் தியானங்கேளு
வளமான வங்கென்றும் நங்கென்றுஞ்சொல்லு
நாணடா ஸ்ரீங்கென்றும் ஷங் ஷங் கென்றும்
நலமான வயிரவர் சுவாகாவென்று
ஆணடா லட்சமுரு நாற்பதுநாள்செப்து
அப்பனே தூபமுடன் தீபங்காட்டே. (295)

காட்டவே ரேசகபூ ரகமுஞ்செய்து
கனமான வில்வத்தா லர்ச்சனைதான்செய்து
வாட்டவே பால்பழங்கள் பலகாரங்கள்
வளமான பாயசம் நெய்தேன்வைத்து
நாட்டவே நமஸ்கார வுபசாரஞ் செய்து
நலமாக நாற்பதுநாள் செய்யும்போது
ஆட்டவே அதிசய வசியமாவான்
ஆனதொரு வடுகனவன் கைவசமாய்ப் போச்சே. (296)

சுப்பிரமணியர் தியானம்.

போச்சப்பா சுப்பிரமணியர் தியானங்கேளு
புகழான அரீங்கென்றும் நரீங்கென்றுஞ் சொல்லு
காச்சப்பா கங்கென்றுஞ் சங்கென்றுஞ்சொல்
கனமான மரீங்கென்றும் ரீங்ரீங்கென்றும்
வாச்சப்பா வாலசுப்பிரமணியதேவா வாவென்று
வளமாக நாற்பதுநாள் லட்சமோது
நாச்சப்பா வடைதோசை யப்பமோடு
நலமான தேனுடனே பாயசம்வையே. (297)

வையப்பா புட்பமொடு புனுகுகந்தம்
வளமான கஸ்தூரி புனுகும்வைநீ
கையப்பா மண்டலந்தான் உபசாரஞ்செய்நீ
கனமான கந்தனவன் வசியமாவான்
மெய்யப்பா சுப்பிரமணிய தியானம்வேணும்
மேலான வடுகனுட தியானம்வேணும்
ஐயப்பா இவரைவிட்டால் வாதமேது
அப்பனே யோகமொடு ஞானமேதே. (298)

ஏதப்பா வயித்தியந்தான் வடுகனலே
யென்மகனே யிவரைவிட்டால் பொய்யாம்பாரு
வாதப்பா மடையரவர் கூடிக்கொண்டு
வளமான தர்க்கங்கள் வீணய்ச்செய்வார்
ஆதப்பா அடையாள மில்லாக்கற்பம்
அப்பனே கஞ்சாவைக் கற்பம்கொள்வார்
போதப்பா பித்தவெறி மேலேகொண்டு
புலம்புவார் மாண்பரவர் மட்டிவீணர். (299)

வீணப்பா வீணாகப் புலம்புவார்கள்
வீணரப்பா பொருளறியா மட்டிமாடு
ஆணப்பா ஆணவத்தா லழிந்தேபோவார்
அப்பனே அதன்சூடு சிரசிலேறி
மாணப்பா மாண்டிடுவார் கபாலசூட்டால்
மகத்தான பித்தராசன் கோபமாவான்
காணப்பா இதுதள்ளி மதியமூர்தங்கொண்டால்
கனமான யாக்கையது அழியொண்ணதே. (300)

ஒண்ணாது பலபுத்தி விட்டுத்தள்ளு
வேதாந்த புத்தியாய் நின்றோருக்கும்
கண்ணாது கல்வியது மிகவேதோன்றும்
கனமான வாசியது க்ஷணத்திற்சிக்கும்
அண்ணாது அறிவாலே குணமூன்றைக்கட்டி
அப்பனே யாக்கையதி லகத்தியனைக் கண்டால்
வண்ணாது அஷ்டசௌ பாக்கியமீய்வான்
வளமான என்பேரன் அகத்தைக்கண்டானே (301)

கண்டதனு லகத்தியனென்ற பேருமாச்சு
கனமான அகத்தியனடா கண்டான்பாரு
விண்டதனல் யான்விண்டேன் யார்விண்டார்கள்
விலையில்லா இரக்கத்தால் விண்டேன்பாரு
அண்டதனல் முந்நூறுங் கண்டபேர்க்கு
அரனெனவே பெயருண்டாம் அருளினேன்பார்
மண்டதனல் இந்நூலைக் கண்டபேர்க்கு
மகத்தான சிவயோகி யென்னலாமே. (302)

ஆமப்பா இந்நூலைப் பதனம்பண்ணு
அப்பனே நல்லோர்கள் பதனஞ்செய்வார்
வாமப்பா இந்நூலை யெடுத்துக்கொண்டு
வளமாக நீயெடுத்துப் பூசைபண்ணு
காமப்பா கல்வியறி வெல்லாந்தோன்றுங்
கனமான இந்நூலைக் கைவிடாதே
நாமப்பா முந்நூறும் பாருபாரு
நலமான கருக்கிடை நிகண்டிதுதான் முற்றே. (303)

தன்வந்திரி-கருக்கிடை நிகண்டு-௩௱
முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

பொருளட்டவணை.

பெயர்.	பக்கம்.
அ	
அகஸ்தியர்	6
அஞ்சனமை	52
அண்டச்சுன்னம்	24
அமுரிகற்பம்	57
இ	
இரசகுளிகை	48
இராசியறியும்படி	32
இரேசகபூரககும்பகம்	2
உ	
உருமாற்றமைச்சித்தர்	36
உருமாற்றமை	46
உரோமப்பெயர்	18
ஊ	
ஊமை	3
ஐ	
ஐங்கோலஜெயநீர்	72
க	
கருங்கையான்கற்பம்	71
கல்லுப்பு	28
கல்லுப்பின்பெயர்	28
கல்லுப்புக்கட்டு	29
கல்லுப்புச்சுண்ணம்	30
கருவிகளறியும்படி	35
கல்லுப்புஜெயநீர்	31
கி	
கிரேதாயுகத்திற்றேரின சித்தர்களின் றொகுப்பு	8
கு	
குருஅண்ட.ஜெயநீர்	31
ச	
சத்தியண்டச்சுண்ணம்	25
சத்தியின்முப்பூபெயர்	17
சத்திபீடநாற்பத்துமுக்கோணங்களு மெழுத்துகளும்	68
சருவவசியாதிக்குங் காந்தச்செந்தூரம்	63
சல்லிவேரின்பெயர்	7
சி	
சிந்தூரம்	50
சிவமுப்பூ	16
சிவமுப்பூச்சுண்ணம்	19
சு	
சுத்தஜலத்தின்பெயர்	14
சுப்பிரமணியர்தியானம்	3
சுப்பிரமணியர்தியானம்	84
சுவாசங்களினொடுக்கம்	2
சுழியின்விவரம்	5
ஞா	
ஞானத்தின்சூக்ஷம்	32
த	
தலைப்பிண்டஜெயநீர்	12
தி	
திரேதாயுகத்திலுந்துவாபரயுகத்திலுங் கலியுகத்திலுங் தேரினசித்தர்களின்றொகுப்பு	8
ந	
நஞ்சுக்கொடியின்பெயர்	23
நூ	
நூலீதல்	11
நூல்கோர்வை	82
நூற்றொகை	15
பு	
புருடருக்குவசியமாத்திரை	42
புளியின்பெயர்	1

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.
பே		வல்லாரைக்கற்பம்	54
பொய்ஞ்ஞானி	36	வழலையின்பெயர்	9
ம		வா	
மதிஜெயநீரின்பெயர்	22	வாசியின்சூக்ஷம்	2
மதிஜெயநீர்	21	வாலைபூசை	22
மதிமயக்கப்பொடி	43	வாலையின்பெயர்	6
மதியமுர்தகற்பம்	57	வாலைபின்பெயர்	”
மாரணமுப்பூ	51	வாலையின்வயது	5
மு		வே	
முப்பூச்சுண்ணப்பெயர்	19	வெடியுப்பு	27
முப்பூவின்செந்தூரம்	64	வெடியுப்புக்கட்டு	29
மூ		வெடியுப்புச்சுண்ணம்	29
மூளையின்பெயர்	11	வெடியுப்புசெயநீர்	30
மே		வை	
மேனிக்கற்பம்	71	வைத்தியசூக்ஷமுப்பூ	38
வ		வைத்தியசூக்ஷமெழுகு	37
வசியதைலம்	58	வைரவர்தியானம்	83
வசியவிபூதி	59		

பொருளட்டவணை.

முற்றுப்பெற்றது.